கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
25 விளம்பரம்
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
416-282-4978
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

துரித பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 25 பாலம் 12 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JUNE 15, 2015

# இலங்கையின் 20ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம்

இலங்கை அரசின் மந்திரிசபை 20ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு 2015 யூன் 8இல் அங்கீகாரம் வழங்கியது. இந்த திருத்தம் சட்டமூலமாக தயாரிக்கப்பட்டு மந்திரிசபையில் யூன் மாதம் நடுப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2015 யூன் 8இல் 20ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை மந்திரிசபையில் சமர்ப்பித்தார். இத்திருத்தத்தில்



இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் தொகையான 225 ஆசனங்களின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்படவில்லை. ஆனால் அவர்கள் தெரிவு செய்யப்படும் முறையிலேயே மாற்றம் கொண்டுவரப்பட உள்ளது.

இவ் 225 ஆசனங்களில், ஒவ்வொரு தொகுதியிலும் அதிகூடிய வாக்குகளை பெறுபவர் உறுப்பினராக தெரிவு செய்யப்படும் FPP (First-Past the Past System) முறை மூலம் 125 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். இதுவே தற்போது கனடாவிலும் (முன்னர் இலங்கையிலும்) நடைமுறையில் உள்ள தேர்தல் முறையாகும். ஏனைய 100 உறுப்பினர்களும் விகிதாசாரமுறையான PR (Proportional Representation System) முறை மூலம் தெரிவு செய்யப்படுவர். இதில் 75 உறுப்பினர்கள் தற்போது இலங்கையில் நடைமுறையில் உள்ள மாவட்ட ரீதியிலான PR முறை மூலமும் 25 உறுப்பினர்கள் தேசியப் பட்டியல் மூலமும் தெரிவு செய்யப்படுவர். இலங்கையின் தற்போதை தேர்தல் முறைமூலம் 225 உறுப்பினர்களும் PR முறை மூலமே தெரிவு செய்யப்படுகிறார்கள். இதில் 196 உறுப்பினர்கள் மாவட்ட ரீதியிலான முறையிலும் 29 உறுப்பினர்கள் தேசியப்பட்டியல் மூலமும் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

SLFP கட்சி முதலில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 250 ஆக அதிகரிக்கப்பட வேண்டும் என தெரிவித்திருந்தாலும் இறுதியில் UNP கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையான 225இல் மாற்றம் செய்யப்படத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டது.

இப்புதிய தேர்தல் முறைமூலம் தற்போது நாட்டில் உள்ள 160 தொகுதிகள் 125ஆக குறைக்கப்படவுள்ளன. இவ்வாறு 35 தொகுதிகள் ஒரே நேரத்தில் குறைக்கப்பட்டு மாற்றியமைக்கப்படவுள்ளதால் யாழ்ப்பாணத்தில் உள்ள 11 தேர்தல் தொகுதிகளும் 6ஆக குறைக்கப்பட வாய்ப்புள்ளது. இதனால் சிறுபான்மைக்கட்சிகள் இத்தேர்தல் முறையால் பாதிக்கப்படலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. NUF கட்சியின் தலைவர் Azad Sally தெரிவிக்கையில் நாட்டில் தமிழர் 14%உம் முஸ்லீம்கள் 10%உம் இருக்கிறனர். அவர்களை நாடாளுமன்றத்தில் பிரதிநிதிப்படுத்த இதே வீதத்தில் அவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை வர வழிவகுக்க வேண்டும் என்றார். 20ஆவது அரசியல் அமைப்புத்திருத்தத்திற்கு அங்கீகாரம் வழங்கிய மந்திரி சபை கூட்டத்தில் பேசும் போது இலங்கை அதிபர் மைத்திரி பாலசிறிசேன புதிய தேர்தல் முறை மூலம் சிறுபான்மை இனங்களுக்கு தகுந்த பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என உறுதியளித்தார்.

DPF கட்சியின் தலைவர் மனோ கணேசனும் இப்புதிய 225 உறுப்பினர் (125 FPP + 100 PR ) முறைக்கு தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளார். 2015 யூன் 8ஆம் திகதி விகாரமாதேவி பூங்காவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கையில் தற்போது நடைமுறையில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யும் முறையை தொடர விட்டால் பணக்காரர்கள் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினர்களாக வருவார்கள். அதனால் படித்தவர்களும் அரசியல் அறிவுள்ளவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக வரக்கூடிய ஒரு புதிய நாடாளுமன்ற

**தொடர்ச்சி 08ஆம் பக்கம்**

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc.

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant


வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

DENTAL OFFICE
DENTAL IMPLANT • ROOT CANAL • WISDOM TOOTH EXTRACTION
Dr. Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS (Glasg) DENTAL SURGEON
2 LOCATIONS
3150 Eglinton Ave. East, Unit 5 Markham/Eglinton | Tel: 416.264.3232
3351 Markham Road, Unit 129, Markham/Steeles | Tel: 416.609.2022

MORTGAGE ALLIANCE
The Guardian
SAVE YOUR MONEY
SAVE YOUR HOME
- 2nd Mortgage
- Renewal & Switch
- Residential & Commercial Mortgage
- Purchase & Refinance
- Home Equity Loan
We're Hiring Experienced & New Agents
Gini Annarasa
Cell: 416.830.3241
*Independently Owned & Operated

VLAMBARAM, GTA SQUARE, 5215 FINCH AVENUE EAST, #201, TORONTO, ON M1S 0C2, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978, e-mail: vlambaram@sympatico.ca, Web: www.Vlambaram.com


HOMES *COMMERCIAL*INVESTMENTS
Salem/Rosland
629k
4 bm 3 warm home
Scarborough
498k
3 bm Finished bsmnt home
Taunton/thicksan
389k
3 bm 3 wsrm home in ajax
stouffville
4bm 3wm Home
HWY 48/ N. OF TORONTO
399k
50 ACRES
Beautiful 50.94 Acres In Georgina,Build Your Dream Home Ideal For Farming Crops- Great Farm Land.
scarborough
154k
2+1 bm condo
Pat Pushpakanthan
Real Estate Broker
COMMERCIAL & RESIDENTIAL
416-894-1187
COMMISSION $500/-* GUARANTEED SALE
14 years of service
Century 21 BROKERAGE
PAT WILL BEAT ANY DEAL*!!
Hall of Famer
80 Corporate Dr. Suite 208
Toronto M1H3G5
416-290 1200


Allstate
You're in good hands.
Allstate Insurance Company Of Canada
Home & Auto Insurance
வீடு, வாகன காப்புறுதி
Suren Navaratnarajah
(Agent)
Cell: 416.520.6916
E-mail: snavaratnarajah@allstate.ca


COTTAGE
FOR RENT
Beautiful waterfront cottage with a capacity of 12 people.
80km away from Scarborough.
Fishing boat and pedal boat is available.
Murali - 416-569-4065
Ganesh - 416-768-8169


நிரு
பிராண்ட்
Niru BRAND ®
அன்பான சமையலுக்கு அம்மா
அறுசுவையான சமையலுக்கு நிரு பிராண்ட்
அன்பும் அறுசுவையும் சேர்ந்தால்
ஆரோக்கியம் தானே!
POUDRE DE CURRY
Achcharu
Mixed Vegetable Pickle
CURRY FLAVOUR
Coconut Milk

# வெள்ளிவிழாக் கடந்தும் வேகநடைபோம் 'விளம்பரம்' இதழ்





கடந்துசென்ற வைகாசிமாதம் இருபத்தி நான்காம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நேரத்தில் 'விளம்பரம்' இதழின் இருபத்தைந்தாவது ஆண்டு விழா சிறப்பான ஒழுங்கமைப்பில், 1173 - பிறிம்லி வீதியில் அமைந்துள்ள இராணிமாளிகை விருந்தளிப்பு மண்டபத்தில் மகிழ்ச்சியுடன் நிகழ்ந்து முடிந்தது. ஆனிமாதம் முதலாம் திகதி வெளிவந்த விளம்பரம் இதழில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை விளக்கமாக தரப்பட்டுள்ளது. அந்த விபரங்களுக்குள் நுழையாமல் மேலோட்டமான சிறப்புக்குறிப்பு ஒன்றை இங்கு வழங்க விரும்புகின்றேன்.

நாங்கள் விவசாயநாட்டுப் பாரம்பரியம் கொண்ட இலங்கை நாட்டிலிருந்து புலம் பெயர்ந்தோம். கைத்தொழில் வளர்ச்சி யடைந்த முதலாம் உலகநாடாகிய கனடா வில் வாழ்ந்து வருகின்றோம். இங்கே முதலாம் தலைமுறையான நாம் எதிர் கொள்ளும் பொருளாதார சமூக நெருக்கடி யின் மத்தியிலும் மாதம் இருமுறை வெளிவருகின்ற ஒரு தமிழ் இதழை இருபத்தைந்து வருடங்கள் கடந்தும், சோராமல் சுணங்காமல், மனம் தளராமல் இயக்கி வருவது என்பது இலகுவான ஒரு செயற்பாடல்ல.

அந்தவகையில் 'விளம்பரம்' இதழை நடத்திவருகின்ற ராஜா மகேந்திரன், சத்தியபாமா தம்பதிகளுக்கும், வர்த்தக விளம்பரங்களைக் கொடுத்து நிதியுதவி செய்துவருகின்ற வணிகர் வள்ளல் களுக்கும், உவப்புடன் மனமொன்றி எழுதி வருகின்ற எழுத்தாள அறிஞர்களுக்கும் தமிழ் உலகம் இதயம் நிறைந்த நன்றியைச் செலுத்துகின்றது.


'வெள்ளிவிழா' மண்டபத்தில் விளம்பரம் இதழில் எழுதிவருவோர், அவற்றுடன் அச்சு, விநியோகம், நிர்வாகம் செயற்பாடுகளுடன் இணைந்துள்ளோர் முதலிய 'விளம்பரம் குடும்பம்' உறுப்பினர்களையும் உள்ளடக்கிய, சிறப்புக்கும் உயர்வுக்கும் உரியதொரு மக்கள் கூட்டத்தினர் நிறைந்து காணப்பட்டனர்.

எல்லோரினது பேச்சுக்களும் நன்றாய் அமைந்தன. முனைவர் கவிஞர் சேரன், முனைவர் சுதர்சனன் இருவரது சிறப்புரைகள் சிந்தனைக் குதிரையை வேகப்படுத்தின. போட்டியில் வெற்றிபெற்ற எழுத்தாளர்கள், கவிஞர்களுக்கு பணக் கொடைகள் வழங்கப்பட்டன. எழுத்தாளர் கௌரவிக்கப்பட்டனர். வணிகர் வள்ளல்கள் கௌரவிக்கப்பட்டனர். 'அடுத்த காலடி' என்னும் நூல் வெளியீடு வெள்ளி விழாவுக்குச் சூட்டப்பட்ட 'கொடுமுடி' எனலாம்.


செவிக்குக்கிடைத்த அறிவூட்டத்துடன் சுவையான சிற்றுண்டிகள், இரவு விருந்தின் பலவகை அறுசுவைகள் என்பன குழுமியோரின் மனங்களை நிறைத்தன. 'விளம்பரம்' இதழின் வளர்ச்சியும் மென்மேலும் வளம்பெற இயற்கையும் இறைசக்தியும் துணைநிற்பதற்கு, தமிழுடன் இணைந்து நாமும் மனங்களில் வேண்டிக் கொண்டோம். அத்தொடு:

'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்'

எனும் ஓரடிமுக்கால் திருக்குறள் வெண்பாவுக்கமைய, மகிழ்ந்து கூடி என்றைக்கும் நிற்குமாறு உள்ளங்களில் பதித்துக்கொண்டு, மீண்டும் இத்தகைய புலமை நிகழ்வுகளை எதிர்பார்த்தபடி பிரிந்து சென்றோம்.



- கந்தசாமி முத்துராஜா -



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

நல்ல ரேட்ல மோட்கேஜ், லைன் ஒப் கிரெடிட், ரீபைனான்ஸ், 2வது, 3வது மோட்கேஜ், பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ், எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க , வீடு வாங்க, விற்க, வாடகைக்கு விட அல்லது பெற்றுக்கொள்ள மற்றும் எதுவாக இருந்தாலும்

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?



## மோட்கேஜ் கிளினிக்

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

திங்கள்—வெள்ளி (call for appointment)

416-613-2788 / 416-816-9011





வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

எமது முகவரி

1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 12001741
Cell : 647-861-8240

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

**HOME FOR SALE**

TORONTO—Staines & Finch
Detached, Corner Lot,
4BR, 4WR, Double Garage



Don Mills & Finch
2BR, 1WR
Condo Apartment



AJAX — Salem & Baxly
3BR, 2WR
Condo Town House



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate Office :
2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto
Brockerage Office :
112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC
Office Phone : 416-391-3232

# கனேடிய பிரதமரும் போப்பாண்டவரும்

உக்கிரேன், போலந்து உட்பட ஆறு ஐரோப்பிய நாடுகளுக்கான தனது சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு வரும் வழியில் கனேடிய பிரதமர் ஸ்ரீபன் காப்பர் வத்திகானில் போப்பாண்டவர் பிரான்ஸிஸை சந்தித்து உரையாடினார். 2015 யூன் 11ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற இந்த சந்திப்பு 10 நிமிடங்கள் மட்டுமே நீடித்தது.

கனேடிய பிரதமர் கடந்த ஒரு கிழமை சுற்றுப் பிரயாணத்தின் போது ஜேர்மனியில் G7 நாடு களின் மாநாட்டிலும் கலந்து கொண்டிருந்தார். கனேடிய பிரதமருக்கும் போப்பாண்டவருக்கும் இடையேயான இந்த சந்திப்பில் இருவரும் உக்கிரேன் நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப் பட்ட பிரச்சனைகள், சுற்றுப்புற சூழல் சம்பந்தபட்ட பிரச்சினைகள் மற்றும் கனடா-வின் மூத்த குடிகளின் கிறிஸ்தவ குடியிருப்பு பள்ளிக்கூடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றிய அறிக்கை என்பன பற்றி உரையாடினர்.

கனடாவின் 150ஆவது பிறந்தநாள் கொண்டா ட்டங்கள் 2017இல் நடைபெறும்போது அதற்கு போப்பாண்டவர் சமூகம் அளிக்க வேண்டும் எனவும் கனேடிய பிரதமர் போப்பாண்டவரை கேட்டுக் கொண்டார். கனடாவின் மூத்த குடிகளின் கிறிஸ்தவ குடியிருப்பு பள்ளி கூடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி ஆராய்ந்த, ‘உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு’ அண்மையில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தது. இவ் அறிக்கை பல முக்கிய பரிந்துரைகளை செய்திருந்தது. இந்த அறிக்கையும் அதில் உள்ள பரிந்துரை களும் பூர்வீக குடிவிவகார அமைச்சர் Bernard Valcourtஆல் போப்பாண்டவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.



1874ஆம் ஆண்டில் இருந்து 150,000க்கும் மேற்பட்ட பூர்வீக குடியின சிறுவர்கள், கனேடிய அரசாங்கத்தின் சார்பில் இயங்கிய 132 கிறிஸ்தவ குடியிருப்பு பள்ளிகூடங்களின் விடுதியில் வலுக்கட்டாயமாக சேர்த்து தரக் குறைவாக நடத்தப்பட்டனர். இதில் 3,200க்கும் மேற்பட்ட சிறுவர்கள் பள்ளி கூடங்களிலேயே இறந்தனர். இதுபற்றி விசாரணை நடத்திய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைகுழு 94 பரிந்துரைகளை கனேடிய அரசிற்கும் கனேடிய மக்களுக்கும் வழங்கியிருந்தது. இச்சம்பவம் தொடர்பாக போப்பாண்டவர் கனடாவிற்கு வரும்போது பூர்வீக குடியினரிடம் மன்னிப்புக் கேட்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் குடி யிருப்பு பள்ளிகூடங்களில் பூர்வீகக் குடியின சிறுவர்களுக்கு எதிராக நடந்தவற்றை கலாசார படுகொலை (Cultural Genocide) என இந்த ஆணைக்குழு விவரித்திருந்தது. இந்தப் பாடசாலைகளில் பெரும்பாலானவை 1970ஆம் ஆண்டளவில் மூடப்பட்டிருந்தாலும் இறுதிப் பாடசாலை சஸ்கச்சுவான் மாகாணத் தில் 1996ஆம் ஆண்டிலேயே மூடப்பட்டது.

போப்பாண்டவர் ஒரு பில்லியன் கத்தோலிக்க மக்களுக்கு அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் சுற்றுப்புற சூழல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக கரிசனை காட்டி யிருந்தார். போப்பாண்டவரின் அறிக்கையில் சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக வேதாகமத்தில் இருந்து மேற்கோள் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. அத்துடன் சுற்றுப்புற சூழல் கடவுளின் கொடை எனவும் அதை பாதுகாப்பது கத்தோலிக்க மக்களின் கடமை எனவும் போப்பாண்டவர் வலியுறுத்தியிருந்தார்.

அவர் தன்னை சந்திக்கும் உலகத் தலைவர் களிடமும் இதுபற்றி கருத்துக்கள் தெரிவித்து வருகிறார். போப்பாண்டவர் கனேடிய பிரதமரி டமும் சுற்றுப்புற சூழல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக தனது கருத்தை வலியுறுத்தி இருப்பார் என ஊடகவியலாளர் கருதுகின்றனர். கனேடிய பிரதமர் G7 மாநாட்டின் கரியமிலவாயு வெளியேற்றத்தின் அளவை 2050ஆம் ஆண்டளவில் பெருமளவு குறைப்பது எனவும் 2100ஆம் ஆண்டளவில் முற்றாக ஒழிப்பது எனவும் எடுத்த தீர்மானத்தை ஆதரித்துள்ளார்.


உடல்நல பராமரிப்பு உங்களை சுற்றிலும் உள்ளது.

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் ontario.ca/healthcareoptions என்ற இணையதளத்திற்கு சென்று விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். வோக்-இன் கிளினிக்கில் இருந்து விழுவதை தடுத்தல் தொடர்பான அனைத்தையும். Health Care Options என்ற இணையத்தளம் மூலமாக உங்கள் ஆரோக்கியத்திற்கு தேவையான அனைத்து வழிகளையும் காட்டுகிறது.

உங்கள் அருகாமையிலுள்ள உடல்நல பராமரிப்பு கிளையை கண்டறிவதற்கு:

- ontario.ca/healthcareoptions க்கு விஜயம் செய்யுங்கள்.
- நீங்கள் என்னத்தை தேடுகிறீர்கள் என்பதை டைப் செய்யுங்கள்
- உங்கள் இருப்பிடத்தை டைப் செய்யுங்கள்
- வழிமுறைகளை பின்பற்றுங்கள்




ontario.ca/healthcareoptions

Ontario

இது ஒரு ஒன்ராறியோ மாகாண அரச விளம்பரம்

# மோடியின் வெளிநாட்டுப் பயணங்கள்

## சர்ச்சைகளும் சச்சரவும்

இந்தியாவில் பாஜக அரசு ஓராண்டை நிறைவு செய்துள்ளது. ஆனால், சாதனைகள் பற்றிப் பேச வேண்டிய நேரத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டுப் பயணங்கள் குறித்து எழுந்துள்ள சர்ச்சைகளுக்குப் பதில் சொல்வதிலேயே பெரும்பாலான பாஜக தலைவர்கள் நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், அந்தளவுக்கு இந்தியாவுக்குள் கடுமையான விமர்சனங் களைச் சந்தித்து வருகிறது, மோடியின் வெளிநாட்டுப் பயணங்கள். பிரதமராகப் பதவியேற்றது முதல் இதுவரை 18 நாடுகளுக்குப் பயணம் செய்திருக்கிறார், மோடி. வரும் நாட்களில் மேலும் பல நாடுகளுக்குச் செல்ல திட்டமிடப் பட்டுள்ளது. இந்நிலையில் மோடியின் வெளிநாட்டுப் பயணங்கள் குறித்து எழுந்துள்ள சர்ச்சையும் சச்சரவுகளும் குறித்து ஓர் அலசல்!

நரேந்திர மோடி இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு, முதன்முதலாகப் பூட்டான் சென்றார். அதனைத் தொடர்ந்து சீசெல்ஸ், மொரீசியஸ், பிரான்ஸ், ஜெர்மனி, கனடா, பிரேசில், ஜப்பான், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சீனா, தென்கொரியா உட்பட 18 நாடுகளுக்கு ஓராண்டில் பயணம் செய்துள்ளார். சராசரியாக இரண்டு மாதங்களுக்கு மூன்று நாடுகள் பயணம். வரும் நாட்களில் பங்களாதேஷ், ரஷ்யா, துர்க்மெனிஸ்தான், துருக்கி என மோடியின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்கிறது.

இப்படித் தொடர்ந்து வெளிநாட்டுப் பயணங்களில் மோடி இருப்பது குறித்த விமர்சனங்கள், அங்கொன்றும் இங்கொன்று மாகச் சிறியதாகத் துவங்கியது. இன்று உச்சத்தைத் தொட்டுள்ளது. டிவிட்டர், ஃபேஸ்புக், பிளொக், வாட்ஸ் அப் என எல்லா இடங்களிலும் மோடியின் வெளிநாட்டுப் பயணங்கள்தான் இன்று அதிகம் விவாதிக்கப்படும் விடயம். இப்பயணங்களில் மோடி எடுத்துக்கொள்ளும் செல்ஃபியும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. 'இந்திய நாட்டின் முதலா வது பிரதமர் ஜவஹர்லால் நேரு கூட மோடி அளவுக்கு வெளிநாடுகளுக்குச் செல்லவில்லை' என்கிறார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி. சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக வுடன் கூட்டணி வைத்திருந்த மதிமுகக் கட்சித் தலைவர் வைகோ, 'மோடி வெளிநாட்டுப் பயணங்களைத் தவிர வேறு என்ன சாதித்திருக்கிறார்' என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

'மோடி, உள்நாட்டில் இருப்பதைவிட வெளிநாடுகளில்தான் அதிகம் இருக்கிறார். வெளிநாடுகளில் போய் உள்நாட்டு விவகாரத்தைப் பற்றிப் பேசுகிறார். வறட்சி மற்றும் பருவம் தவறி பெய்த மழை காரணமாக நாடு முழுவதும் விவசாயி கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பயிர்கள் சேதமடைவதால் வருவாய் இழந்து தவித்து வருகின்றனர். அதற்கு உரிய இழப்பீடு கேட்டு மத்திய அரசை எதிர்த்து போராட்டங்களும் நடத்தி வருகின்றனர். அவர்கள் பிரச்சினை குறித்துக் கேட்க வேண்டிய பிரதமர் நரேந்திர மோடியோ வெளிநாட்டு பயணங்களில்தான் ஆர்வம் காட்டி வருகிறார்' என்கிறார், ராஷ்ட்ரீய லோக்தளம் கட்சித் தலைவர் அஜித்சிங்.

'பிரதமர் மோடி வெளிநாட்டுப் பயணங்களில் காட்டும் ஆர்வத்தையும் நேரத்தையும் கொஞ்சம் உள்நாட்டில் பயணம் செய்வதற்கும் பயன்படுத்தலாம். அப்பொழுதுதான் நாட்டில் மக்கள் வேதனையில் வாடும் நிலையை அவர் தெரிந்து கொள்ள முடியும்' என்கிறார், பீகார் முதல்வர் நிதீஷ்குமார்.

ராகுல் காந்தி, 56 நாட்கள் விடுமுறையை முடித்துக்கொண்டு திரும்பி பின், கூடுதல் பலத்துடன் மோடியின் செயல்பாடு களைக் கடுமையாக விமர்சித்து வரும் நிலையில், ஒவ்வொரு முறையும் மோடியின் வெளிநாட்டுப் பயணத்தைக் குறிப்பிடத் தவறுவதில்லை. 'அடிக்கடி வெளிநாட்டுப் பயணங்களை




மேற்கொள்ளும் பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவிலும்

**- மா. கிருஷ்ணன் -**

சுற்றுப் பயணம் செய்து விவசாயிகளைச் சந்திக்காதது ஏன்? என்று நாடாளுமன்றத்தில் ராகுல் எழுப்பிய கேள்வியால் கடும் அமளி ஏற்பட்டது. ராகுல்காந்திக்குப் பதில் சொன்ன, மத்திய அமைச்சர் அருண் ஜெட்லி, 'தேசத்தின் வளர்ச்சிக் காகவே பிரதமர் மோடி வெளிநாட்டுப் பயணங்களை மேற் கொண்டு வருகிறார். ஆனால், ஒரு சிலர் எதற்காக வெளிநாடு செல்கின்றனர், அவர்கள் எங்கிருக்கின்றனர் என்பதே தெரி யாத அளவுக்கு உள்ளது' என ராகுல்காந்தியை மறை முகமாகத் தாக்கவும் செய்தார்.

வெளியிலிருந்து வரும் விமர்சனங்கள் ஒருபக்கம் இருக்க, பாரதிய ஜனதா கட்சிக்குள் இருந்தும் மோடியின் வெளிநாட்டுப் பயணங்கள் குறித்து விமர்சனம் எழுந்துள்ளது. வாஜ்பாய் தலைமையிலான அரசில் பங்கு விலக்கல் துறை அமைச்சராக இருந்த அருண் ஷோரி, 'மோடி அரசு இலக்கில் லாமல் சென்றுகொண்டிருக்கிறது. வெளிநாட்டுக் கொள்கைக-ளில் சிறப்பாகச் செயல்பட்டிருந்தாலும் உள்நாட்டுப் பொருளா தாரத்தில் பெரிய மாற்றங்களை மோடி செய்யவில்லை. செய்தித்தாள் தலைப்புச் செய்திகளை உருவாக்குவதில்தான் இந்த அரசு கவனமாக உள்ளது' எனக் கூறியுள்ளார்.

இந்தத் தாக்குதல்களுக்குப் பதில் சொல்லும் பாஜகவினர், 'வெளியுறவுக் கொள்கைகளை வலுப்படுத்துவதிலும் 'மேக் இன் இந்தியா' திட்டத்திலும் அதிக கவனம் செலுத்தி வரும் மோடி, இதற்காகவே வெளிநாட்டுப் பயணங்கள் செல்கிறார்' என்கிறார்கள். மேலும், 'நமது நாட்டின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவுக்குப் பிறகு வெளியுறவுக் கொள்கையை முன்னிலைப்படுத்தித் தேசத்தின் கௌரவத்தை உயர்த்தும் முயற்சியில் ஈடுபட்டவர் அடல் பிகாரி வாஜ்பாய் மட்டுமே. அவரது அணுகுமுறையைப் பின்பற்றியே நரேந்திர மோடியின் வெளியுறவுப் பயணங்கள் அமைந்து வருகின்றன. இரு தரப்பு வர்த்தகம், கலாசார உறவு, பாதுகாப்பை மேம்படுத்துதல், இந்தியாவில் செல்வந்த நாடுகளின் முதலீடு, சிறிய நாடுகளுக்கு இந்தியாவின் உதவி என மோடியின் பயணத் திட்டத்தில் தெளிவான வரையறைகள் காணப்படுகின்றன. இந்தப் பயணங்களில் அந்தந்த நாடுகளுக்கும் இந்தியா வுக்கும் இடையே பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இதில் பல முதலீடுக்கான ஒப்பந்தங்களும் அடங்கும். வெளிநாட்டுப் பயணங்களின் பயன்பாடு பற்றி அறியாத, வெளியுறவுக் கொள்கைகள் நாட்டின் வளர்ச்சியில் கொண்டுள்ள பங்களிப்பை அறியாதவர்கள்தான், மோடியின் பயணங்களைச் சுற்றுலா நோக்குடன் எள்ளி நகையாடு கின்றனர். மோடி பயணம் செய்துள்ள நாடுகளின் பட்டியலைக் காணும் எவரும், தெளிவான இலக்குடன் அவரது பயணம் அமைந்து வருவதை உணர்வர்' என்கிறார்கள் பாஜகவினர்.

'இந்திய நாட்டிற்கு வருமானத்தையும் பொருளாதாரத்தையும் முதலீடுகளையும் கொண்டு வருவதற்காகவே பிரதமர் வெளிநாடு செல்கிறார்' எனக் கூறும் பாஜக தமிழ் மாநில தலைவர் தமிழிசை சௌந்தராஜன், 'மோடி ஒன்றும் கள்ளத் தோணி ஏறிக் காணாமல் போகவில்லை' என மோடியின் பயணங்களை விமர்சித்த வைகோவை மறைமுகமாகச் சாடவும் செய்துள்ளார்.

'பிரதமர் வெளிநாட்டுப் பயணங்களால் இந்தியாவுக்கு 1 லட்சத்து 32 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு கிடைத்திருக் கிறது. கடன்பாக்கி வைத்துப் பழக்கப்பட்ட நாடு, இன்று மங்கோலியாவுக்கு 6 ஆயிரத்து 300 கோடி ரூபாய் உதவி செய்யும் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. மேலும், நாட்டை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்றால், 5 ஆண்டுகள் ஆட்சிக் காலத்தில் பிரதமர் மோடி உலகில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் சென்று வர வேண்டும். உலக நாடுகள் அனைத்துமே இந்தியாவை ஏற்றுக்கொள்ளும் நிலையை ஏற்படுத்த வேண்டும்' என்கிறார் மத்திய இணை அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன்.

'மோடியின் முதல் வெளிநாட்டுப் பயணம் பூட்டானுடன் தொடங்கியது. அதன்மூலம், பூட்டான் மீது சீனா வல்லாதிக் கம் செலுத்த முடியாதவாறு பாசவலையை இறுக்கியது இந்தியா. அடுத்துப் பிரேசில் சென்றார். மோடியின் ஆலோசனைப்ஒளபடி, பிரிக்ஸ் வளர்ச்சி வங்கி துவங்குவதாக அறிவிக்கப்பட்டது. அதையடுத்து, இந்தியாவின் மிக நெருக்கமான கூட்டாளியாக இருந்திருக்க வேண்டிய, அதே சமயம் இந்தியாவிடம் இருந்து வெகுவாக விலகிப் போயிருக் கும் நேபாளத்திற்கு மோடியின் பயணம் அமைந்தது. நேபாளத்துக்கு இந்தியா அறிவித்த பல கோடி ரூபாய் கடனுதவிகள், பல்வேறு வளர்ச்சித் திட்டப் பங்களிப்புக்கான ஒப்பந்தங்கள் அந்த நாட்டுடனான நமது உறவை வலுப்படுத்தின. குறிப்பாக இந்திய எதிர்ப்பையே நோக்க மாகக் கொண்ட மாவோயிஸ்ட் தலைவர் பிரசாண்டாவே மோடியின் வருகையையும் அதனால் விளைந்த நன்மை களையும் வரவேற்றார். நான்காவதாக மோடி பயணம் செய்த நாடு ஜப்பான். இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் சீனா தொடர்ந்து நெருடலான அண்டை நாடாக உள்ள நிலையில், ஜப்பான் பயணத்தைச் சீனாவுக்கு எதிரான ராஜதந்திரப் பயணமாக மோடி அமைத்துக் கொண்டார்' என ஒவ்வொரு வெளிநாட்டு பயணத்தையும் மோடி யின் சாதனைகளாக

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6


# இலங்கையின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

உறுப்பினர்களை தெரிவு செய்யும் முறைக்கு தற்போதைய தேர்தல் முறை மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை மக்கள் தன்னை அதிபராக ஜனவரி 8இல்



தெரிவு செய்ததன் மூலம் அவர்களின் விருப்பத்திற்கேற்ப கடந்த 37 வருடங்களாக அமலில் இருந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட இலங்கை அதிபரின் அதிகாரங்களை 19ஆவது அரசியல் அமைப்புத் திருத்த சட்டத்தின் மூலம் ஒழித்துவிட்டேன். அதேபோல் மக்களின் விருப்பத்திற்கேற்ப நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யும் முறையையும் 20ஆவது அரசியல் அமைப்புத்திருத்த சட்டத்தின் மூலம் மாற்றியமைக்க உள்ளேன் என கூறினார். தற்போதைய தேர்தல் முறை மூலம் கட்சித் தலைவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களை (Preferential) நாடாளுமன்ற உறுப்பினராக நியமிப்பதன் மூலம் நாடாளுமன்றம் கறைபடிந்து விட்டது. இதனால் மக்களின் விருப்பத்திற்கு அமைய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருக்கும் 20ஆவது அரசியல் அமைப்பு சட்டத்திருத்தத்திற்கு எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவளித்து நிறைவேற்ற வேண்டும் என்றார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கி மூன் 2015 யூன் 05ஆம் திகதி இலங்கை அதிபரிடம் நடத்திய தொலைபேசி உரையாடலில் 20ஆவது அரசியல் அமைப்பு சட்டத்திருத்தத்தை விரைவில் அமல்படுத்துமாறு வலியுறுத்தினார் என Colombo Page எனப்படும் இணைய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. அச் செய்தியில் 19ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தை அமல்படுத்தியதிற்கு ஐ.நா. பொதுச்செயலாளர் இலங்கை அதிபரை பாராட்டினார் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்து தொலைபேசியில் பேசிய இலங்கை அதிபர் 20ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் விரைவில் அமல் படுத்தப்படும் எனவும் தான் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் ஐ.நா. மனித உரிமை மாநாட்டில் கலந்து கொள்ளும்போது இலங்கையில் புதிய அரசாங்கம் பதவியில் இருக்கும் எனவும் தெரிவித்ததாகவும் Colombo Page தெரிவித்துள்ளது.



20ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் அமல்படுத்தப்பட்டாலும் இலங்கையில் 2015 இல் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தற்போது நடைமுறையில் உள்ள PR தேர்தல் முறைமூலமே நடைபெறும் என இலங்கை அதிபரின் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.




# மோடியின்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

முன்வைக்கிறார்கள் பாஜகவினர்.

ரிசர்வ் வங்கி ஆளுநர் ரகுராம் ராஜன், மோடி அரசின் ஓராண்டு ஆட்சி குறித்துக் கூறியுள்ளது, பாஜகவினர் வாதத்துக்கு வலு சேர்க்கிறது. "அமெரிக்காவில் நிலவிய முதலீட்டாளர்கள் மந்த நிலையை அந்நாட்டு முன்னாள் அதிபர் ரொனால்ட் ரீகன் மாற்றி



அமைத்தார். பொருளாதா ரத்தைச் சீரமைக்க அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் வெற்றிக் கண்டது. இந்தியாவைப் பொறுத்த வரை நரேந்திர மோடி என்பவர் "வெள்ளை குதிரையில் வந்த ரோனால்ட் ரீகன்'' போலவே பார்க்கப்பட்டார். மோடி தலைமையிலான அரசின் மீது நாட்டின் மக்கள் அதீத நம்பிக்கை கொண்டிருந்தனர். அந்த அதீத நம்பிக்கை, எதிர்பார்த்த அளவுக்கு நிறைவேற்றுவதற்குச் சாத்தியம் இல்லாதது. இருப்பினும், பிரதமர் மோடி தலைமையிலான அரசு முதலீட்டை ஈர்க்கும் நிலையை உருவாக்கியுள்ளது என்பதை மறுக்க முடியாது. முதலீட்டாளர்களின் தேவையைப் பூர்த்திச் செய்யும் நிலையை அரசு கூர்ந்து கவனித்துக் கையாளுகிறது என்கிறார் ரகுராம் ராஜன். அதேநேரம், முதலீட்டை ஈர்ப்பது மற்றும் வரிவிதிப்பு இரண்டுக்கும் இடையே இருக்கும் முரண் குறித்தும் கருத்து தெரிவித்த ரகுராம் ராஜன், வரி விதிப்பிலும் இந்த அரசு கவனத்தோடு செயல்பட்டு இருக்கலாம். வணிகச் சூழலில் வரிவிதிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது" என்றார்.

ஆனால், மோடி பயணங்களின் சாதனையாகப் பாஜகவினர் முன்வைப்பவற்றைச் சீதாராம் யெச்சூரியும் ராகுல்காந்தியும் மறுக்கிறார்கள். 'மோடியின் மேக் இன் இந்தியா திட்டம் முதலாளிகளுக்கானது மட்டுமே. அதனால் ஏழை மக்களுக்கு எந்த நன்மையும் கிடையாது' என்கிறார் ராகுல்காந்தி.

'இந்திய வெளியுறவுக் கொள்கைகளைப் பொறுத்தவரையில், மன்மோகன் சிங் தலைமையிலான முந்தைய அரசு கடைப்பிடித்த அதே கொள்கையைத்தான், தற்போது நரேந்திர மோடி தலைமையிலான அரசும் பின்பற்றி வருகிறது. ஆனால், இதற்கு முன்பிருந்த பிரதமர்களைவிட, மிக அதிகமான வெளிநாட்டுப் பயணங்களை மோடி மேற்கொள்கிறார். இவரது வெளியுறவுக் கொள்கை இந்தியாவின் நலனுக்கானவை அல்ல. அவை அதிகமும் அமெரிக்க நலன் சார்ந்தவையாகவே உள்ளன. எனவே, இந்தப் பயணங்களால் இந்திய நாட்டுக்கு நிச்சயம் உறுதியான நன்மை எதுவும் கிடைக்காது. இது கவலையளிக்கக் கூடியது' என்கிறார் சீதாராம் யெச்சூரி.

## சரி, இந்த விமர்சனங்களுக்கு மோடி என்ன சொல்கிறார்?

தனது வெளிநாட்டுப் பயணங்கள் குறித்து, தொடர்ந்து கிண்டல் செய்து எதிர்க்கட்சிகள் குரலெழுப்பிய நிலையிலும் கருத்து எதுவும் தெரிவிக்காமல் இருந்த மோடி, சீன பயணத்தின் நிறைவு நிகழ்ச்சியாக இந்திய சமுதாயத்தினருடன் கலந்துரையாடிய போது முதன்முறையாக இதுபற்றிப் பேசினார். 'ஜெர்மனி, பிரான்ஸ், கனடா நாடுகளுக்குச் சென்றபோதே என் மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்தது. வெளிநாடு செல்வதுதான் மோடியின் முக்கிய வேலை என்கிறார்கள். உழைக்காமல் இருந்தால் குறை கூறலாம். தூங்கிக் கொண்டிருந்தாலும் குறை கூறலாம். ஆனால், எனது துரதிரஷ்டம், ஓய்வில்லாமல் உழைப்பதை குறை கூறுகிறார்கள். மக்களுக்கு அதிகமாக உழைப்பதை குற்றம் என்று கூறினால், அந்தக் குற்றத்தை 125 கோடி இந்தியர்களுக்கு மீண்டும் மீண்டும் நான் செய்வேன்.

செலவை குறைப்பதற்காகவே ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு நான் பயணம் செல்கிறேன். பதவியேற்ற பிறகான இந்த ஓராண்டில் நான் ஒருநாள் கூட விடுமுறை எடுத்துக்கொண்டது கிடையாது. இரவு பகலாக உழைக்கிறேன். ஓய்வெடுத்தாலோ சுற்றுலாவுக்குச் சென்றாலோ என்னால் வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது. நான் அனுபவமில்லாதவன். பிரதமராகப் பதவியேற்றபின், தினமும் பல விஷயங்களைக் கற்று வருகிறேன். வெளிநாட்டுப் பயணங்களையும் பல விடயங்களைக் கற்றுக்கொள்ளப் பயன்படுத்துகிறேன். வளர்ந்து வரும் நாடுகள் பற்றி 20 ஆண்டுக்கு முன் முன்னேறிய நாடுகள் கண்டு கொண்டதில்லை. ஆனால், இப்போது காலம் மாறி வருகிறது. இதற்கு இந்தியா தயாராகி வருகிறது. உலகுக்கு இந்தியா அளிக்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன என்பதை என் பயணங்களில் உணர்கிறேன்.

மக்களவை தேர்தலுக்கு முன், மோடி யார்? அவருக்கு வெளியுறவு கொள்கைகள் பற்றி என்ன தெரியும்? என்று விமர்சித்தனர்.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# நாமும் நமது இல்லமும்

ராஜா-மகேந்திரன்

## தொடர் - 442

மில்லெனியல்ஸ் (Millennials) அல்லது என Generation 'Y' என அழைக்கப்படும் வயதுக்குரியவர்கள் அதாவது 1980 - 1994 வரை பிறந்தவர்கள், இப்பொழுது முதல் ஆதனம் வாங்குவதில் முனைப்பு காட்டுவதனை CMHCஇன் அறிக்கைகள் தெரியப்படுத்துகின்றன.

இவர்கள் முதல் தடவை வீடு, மனை வாங்குபவர்கள். அதாவது First time home byers. கடந்த 27 மாதங்களில் கைமாறிய 620,000 மனைகள், வீடுகளில் 45% ஆனவை இவர்களே வாங்கியுள்ளார்கள் என CAAMP என அழைக்கப்படும் அடமானக் கடன் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பொதுவாக வீடு, மனைகள் வாங்கும்போது பிழையான ஆதனத்தை வாங்கினால் அதனால் பெரிய நஷ்டங்கள் எதிர்காலத்தில் வரக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. இதனால் வாங்க முன்பாக ஐந்து (5) முக்கிய விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**1. வீடு, மனை வாங்கும் பகுதி** (Neighbourhood) (Location)

- Public transit (TTC, go station....)
- பாடசாலைகள்
- Crime புள்ளி விபரம்
- Grow house (சட்டத்திற்கு எதிரான, முரணான வளர்ப்புகள் இருந்த ஆதனமா?)
- வீட்டின் கீழ்ப்பகுதியில் மழையினால் பாதிப்பு ஏற்பட்டதா அல்லது ஏதாவது பாதிப்புகள் உண்டா?
- காப்புறுதியைப் பாவித்து பணம் எடுத்து திருத்த வேலைகள் செய்யப்பட்டதா?

**2. தகுதியான வீட்டு முகவரை தெரிவு செய்தல்**

• பொதுவான மக்களின் மனப்பான்மை

வீடு, மனையை சந்தைக்கு கொண்டு வந்திருக்கும் வீட்டு முகவரைக் கொண்டு, அதே ஆதனத்தை வாங்கினால் தரகுப் பணம் (Commission) ஐ மீதப்படுத்தலாம் என்ற எண்ணம் உண்டு.

குறிப்பிட்ட முகவரின் (listing sales rep.) முக்கிய கடப்பாடு விற்க கொடுத்தவரின் (விற்பனையாளர்) நன்மைக்கே அவர் முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதே. குறிப்பிட்ட ஆதன முகவர் (listing sales representative) க்கும் வீட்டு உரிமையாளரிற்குமுரிய ஒப்பந்தம் நீங்கள், நாங்கள் Listing Agent இடம் வாங்கினாலும் அவர் நியாயமாக விற்பவர் நலனையே கருதுவார். மற்றும் கருதவேண்டும். அதற்கேற்ப செயற்பட வேண்டும்.

எங்களிற்கு என்று ஒரு முகவரை வைத்திருந்தால் அவர் எமது நலனை எப்பொழுதும் கவனிப்பவராக இருப்பார். இவர் எமக்கு தகுந்த, தரமான, சிறந்த பகுதிகளில் ஆதனத்தை வாங்கித்தருவார். இவருடனான வியாபாரத் தொடர்பு எப்பொழுதும் இருக்கும். தகுந்த முகவரை எவ்வாறு தெரிவு செய்வது, நம்பிக்கையானவர்களைக் கொண்டு (நண்பர்கள், சொந்தக்காரர்கள்) அவர்களினால் ஒருவரை தொடர்பு கொள்ளுதல் (Agent referral by friends / relatives) குறிப்பிட்ட ஆதன முகவரின் ஆதனம் பற்றிய அறிவை அறிதல் நல்லது.

குறிப்பு - பணத்திற்காக Referral செய்பவர்களும் இருக்கிறார்கள், கவனமாக இருக்கவும். அண்ணன் தம்பிக்கு பணத்திற்காக பிழையான முகவர்களை தொடர்புபடுத்திவிட்ட சோகக்கதைகள் பல உண்டு.

**3. எவ்வளவு பணத்திற்திற்கு வீடு, மனை வாங்க முடியும்.**

எங்களளவிற்குள் ஆதனம் வாங்கினால் எமது வாழ்வைத் தொலைக்காமல் அடமானக்கடன், ஆதனவரி, மற்றைய செலவுகளை செய்யலாம் என்ற அளவுகோல் நிச்சயமாக தெரிந்திருக்க வேண்டும். எனவே வீடு, மனை தேடத் தொடங்க முன்பாக அடமானக்கடன் பெற்றுதரும் முகவரிடம் சென்று எமது ஆகக்கூடிய கடன் தொகையின் அளவைக் கணக்கெடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு பிறகே வீடு தேடும் படலத்தை ஆரம்பித்தல் சிறந்தது.

**4. தகுந்த அனுபவமிக்க வீட்டு பரிசோதகரை தெரிவு செய்தல்**

வீடு, மனை வாங்கிச் சென்றபின் ஏற்பட இருக்கும் எதிர்பாராத செலவுகளை




தவிர்ப்பதற்கு தகுந்த வீட்டு பரிசோதகரை கண்டு பிடித்தல் வேண்டும்.

இரண்டு அல்லது மூன்று Home Inspector இன் பெயர்களை தெரிவு செய்து அவர்களுடன் கதைத்து தகுந்த அனுபமிக்கவரை தெரிவு செய்தல் சிறந்ததாகும்.

**5. ஒன்றிற்கு மேற்பட்ட வாங்குபவர்களுடன் போட்டி போடுதல்**

இன்றைய நிலைமையில் (May 2015) நியாயமான விலையில் சந்தைப்படுத்தப்படும் வீடுகளிற்கு ஒன்றிற்கு மேற்பட்ட பல வீடு வாங்குபவர்கள் போட்டி போடுவதனை (Bidders, Multiple offers) காணக் கூடியதாக உள்ளது.

அனுபவமிக்க ஆதனமுகவர்கள் விற்கப்படும் விலைக்கு, மிகக் குறைவாக ஆதனத்தை சந்தைப்படுத்தி போட்டியை உருவாக்குகின்றார்கள். இதனால் போட்டி போட்டு மிகக் கூடிய விலையில் விற்கப்படுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. விற்கப்படக் கூடிய விலையை நிர்மாணித்து அதற்கேற்ப உங்களது விலையைக் கொடுப்பதே சிறந்தது. போட்டி மனப்பான்மையில் அதிக விலை கொடுத்து வாங்கினால் நட்டப்படுவது வாங்குபவரே என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

மேலுள்ள விடயங்களில் மிகக் கவனம் தேவை.


**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated

**"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"**



***Raja Mahendran,*** P.Eng.
*Broker / Owner*

***5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969***

* INDEPENDENTLY OWNED AND OPERATED

**COMMERCIAL BUILDING FOR SALE**

***SCARBOROUGH***
2300Sq.ft. Net rent $4500. Tenant will stay. Anither 4 or 5 years. Asking Price $875k
***MARKHAM & SHEPPARD***

**HOUSE FOR SALE**

***CHICOSKY & NORTH OF STEELES BRAMPTON***
4 Bedroom link house for sale. 2 Years old. 3 Washroom. ***Asking Price $539k***

**CONDO FOR SALE**

***SHEPPARD & HWY 401***
3 Bedroom condo. for sale. 2 Washroom. Completely. renovated. New Appliances.
***Asking Price $260,000***

**INDUSTRIAL BUSINESS FOR SALE**

Over 40,000sq.ft building. Lad Size 2.4 Acre. Out side storage. Plenty of parking. Owner lease back possible.
***MEADOWVALE / LAWRENCE/ SCARBOROUGH Asking Price $3.4 Million.***

• 80 Rooms Branded Hotel Property, about 2.5 Hrs from GTA Room Revenue approx. 1.35 Millions and asking only 3.79 M Great Deal !
• 60 Rooms Branded Great looking property in 1.5 Hrs North west of GTA.Room Revenue approx. 1.0 Million and asking just 3.45 M.
• Great plaza in Scarborough with good mix of Tenants. Gross Income about 35K and Net Income about 24 K per month. Good Cap Rate !

**CONDO. FOR SALE**

***LAKESHORE & PARK (ETOBICOKE)***
1 Bedroom /2 levels condo for slae. 2 Washrooms. 4 Years new condo building. 5 Appliances.
***Asking price $349,900***

**LAND FOR SALE**

1 Acre land , No Building. You Build your own business place. (No Houses)
***MEADOWVALE / LAWRENCE/ SCARBOROUGH***
***Asking price @799,000***

**HOUSE FOR SALE**

***SCAR.GOLF CLUB & LAWRENCE***
Detached house for sale. 3 Level back split. 2 Washroom. Close to TTC accessibility.
***Asking Price $499,900***

**CONDO. FOR SALE**

***MCCOWAN & FINCH***
2 Bedroom condo. for sale. Swimming pool, 24hrs. ...., underground parking.
***Asking price $279,900***

# பெற்றோர் எப்படி...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

அக்கறை கொண்ட யாரும் இதை செய்யத் தான் வேண்டும். அடுத்த தலைமுறையில் வளர்பவர்கள் உங்களையும் என்னையும் விட ஒரு படி மேலாக இருக்க வேண்டும். இது மிக முக்கியம். அடுத்த தலைமுறையினர் அதிக ஆனந்தத்துடன், குறைந்த பயத்துடன், குறைந்த துன்பத்துடன், குறைந்த வெறுப்புடன் இருக் வேண்டும். இதற்கு நாம் ஏதாவது செய்தாக வேண்டும், இல்லையா? உங்களுக்கு 2 குழந்தைகள் என்றால் அடுத்த தலைமுறைக்கு நீங்கள் விட்டுச் செல்லும் நன்கொடையாக இருக்க வேண்டும். இரண்டு அடங்காப்பிடாரிகளாக இருக்கக் கூடாது. உங்களை விட சிறிதளவாவது உயர்ந்த மனிதர்களை நீங்கள் விட்டுச் செல்வதுதான் இந்த மனித சமுதாயத்திற்கு நீங்கள் செய்யக்கூடிய ஒரு பெரிய பங்களிப்பாக இருக்கும்.

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

## ‘யார் நல்லவன்? யார் கெட்டவன்?’

முதலில் அந்தத் தீர்ப்பை எழுத நீங்கள் யார்?
எல்லையில் ராணுவ வீரராய் துப்பாக்கி பிடித்து நிற்கிறீர்கள். பாகிஸ்தான் வீரர்கள் பத்துப் பேரைச் சுட்டுத்தள்ளுகிறீர்கள். நீங்கள் நல்லவரா, கெட்டவரா?
இந்திய ராணுவத்தினர் அழைத்துப் போனால் மெடல் கொடுப்பார்கள். பாகிஸ்தான் ராணுவத்தினர் அழைத்துப் போனால் சித்திரவதைக் கூடத்தில் போடுவார்கள். ஒரே செயலைச் செய்த போதும், ஒருவருக்கு நீங்கள் நல்லவர். இன்னொருவருக்கு நீங்கள் வெகு மோசமானவர். உங்களை யாருடன் அடையாளப்படுத்திக்கொள்கிறீர்களோ?, அதை வைத்துத்தானே நல்லது கெட்டதை உங்களால் தீர்மானிக்க முடிகிறது.
இயற்கை ஒருபோதும் பாரபட்சம் பார்ப்பதில்லை. செடி இருக்கிறது. தண்ணீரை பூசாரி ஊற்றினாலும், பூ பூக்கும், கொலைகாரன் ஊற்றினாலும் பூ பூக்கும்.

ஆனால் நீங்கள்? கெட்டவர் என்று யாரைப்பற்றித் தீர்மானித்தாலும், அவர் மீது வெறுப்பை வளர்க்கிறார்கள். முதலில் மனதளவில் அவரையும் உங்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ளப் பழகுங்கள். உங்கள் குறுகிய மனநிலையில் யாரைப் பற்றியும் தீர்ப்பு எழுதாதீர்கள்.’

# மோடியின்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

இப்போது என் பயணங்களை விமர்சிக்கின்ற னர். இந்தப் பயணங்களை நான், ஐந்தாவது ஆண்டில் செய்திருந்தால் யாரும் பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள். முதல் ஆண்டிலேயே செய்துள்ளதால்தான் இவ்வ ளவு விமர்சனங்கள். ஆனால், இதனால்தான் உலகம் இந்தியாவைத் திரும்பிப் பார்த்துள்ளது. எனது பயணங்கள், அந்தந்த நாடுகளுடனான இந்திய உறவை வலுப் படுத்தியுள்ளது. இந்தப் பயணங்களில் நான் விதைத்த விதைகள், வளர்ச்சியடைவதற்குக் கால அவகாசம் தேவை என்கிறார், மோடி.

ஆனால், மோடியின் பயணங்களில் பல, ஒரு பிரதமர் செல்ல வேண்டிய அவசி யம் இல்லாதவை. சில அதிகாரிகள் மட்டத்திலே யே முடிந்துவிடக்கூடியவை. பல ஆண்டு களாகத் தொடர்ந்து நடைபெற்றுவரும் பேச்சு வார்த்தையின் பலனாக விளைந்தவை. அவற்றை மோடி தனது தனிப்பட்ட சாதனை களாக முன்வைப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என்கிறார்கள் மோடி பயணங் களை விமர்சிப்போர்.



மோடியின் பயணங்கள் சாதனைகளாக மாறுமா, சுற்றுலாப் பயணங்களாகவே முடிந்துவிடுமா? காலம் பதில் சொல்லும்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்




# MATH WORLD

MOST ADVANCED TALENTED HELP

# Summer Math

**For**



## G11 & G12 only

## The Most Successful Program

**Since 2003**

# 90's

**& above**

**Guaranteed**

**(From previous experience of teaching math for more than 27yrs )**

## By September 2015:

- **G11 Students will have covered their entire course material and will be able to handle G12 standard.**
- **G12 Students will have covered their entire course material and will be able to handle 1st yr. University standard.**

## INFO: 416-666-5515

**Special Note:** Students who currently are ends G10 & G11 and have a lower average, will be given extra training, to be able to achieve, our goal 90 and above.

**Starts July 1st week**

# பெற்றோர் எப்படி இருக்கவேண்டும்?

கேள்வி: நமஸ்காரம் சத்குரு, இன்றைய உலகில் ஒரு நல்ல பெற்றோரின் பாத்திரம் எப்படி இருக்க வேண்டும்?

சத்குரு:

உண்மையில் பெற்றோராக இருப்பதே ஒரு வேடிக்கையான விடயம்தான். இதுவரை யாரும் இருந்ததை விட நான் ஒரு நல்ல பெற்றோராக இருக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் முயற்சிக்கிறீர்கள். ஆனால் இதுவரை யாருக்குமே, குழந்தைகளை வளர்ப்பதில் எது சிறந்த வழி என்று தெரிந்திருக்கவில்லை. உங்களுக்கு 12 குழந்தைகள் இருந்தாலும் நீங்கள் இன்னும் கற்றுக் கொண்டுதான் இருக்கிறீர்கள். நீங்கள் 11 குழந்தைகளை நன்றாக வளர்த்திருப்பீர்கள். ஆனால் அந்த 12 ஆவது உங்களுக்கு நிறைய வேலையைக் கொடுக்கலாம். எனவே உங்கள் வேலையை இன்னமும் சிறப்பாக செய்ய ஆசைப்படுகிறீர்கள். அப்படிச் சிறப்பாக நீங்கள் என்ன செய்ய முடியும்?

நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அப்படி உங்களை முதலில் மாற்றிக் கொள்ளுங்கள். அதற்கு முன் முக்கியமாக உங்களையே நீங்கள் ஒரு சில விடயங்களில் கவனித்து சரிசெய்து கொள்ள வேண்டும். உங்களுக்குப் போதுமான நேரம் செலவு செய்ய வேண்டும். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள், நீங்கள் எப்படி உட்கார்கிறீர்கள், நீங்கள் எப்படி நிற்கிறீர்கள், நீங்கள் எப்படி பேசுகிறீர்கள், நீங்கள் என்ன செய்கிறீர்கள், நீங்கள் என்ன செய்யவில்லை, எல்லாவற்றையும் நீங்களே உங்களை நன்கு கவனியுங்கள். ஏனெனில் குழந்தைகள் உங்களிடமிருந்து எல்லாவற்றையும் மிக வேகமாக கற்றுக் கொள்கிறார்கள். அதுமட்டுமல்ல, அவர்கள் நீங்கள் செய்வதை எல்லாம் மிகைப்படுத்தியும் செய்வார்கள்.

எனவே குறைந்தபட்சமாக, நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அப்படி உங்களை முதலில் மாற்றிக் கொள்ளுங்கள். சிலர் அதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனாலும் பரவாயில்லை. மற்றவர்கள் உங்களிடமிருந்து மேலும் கூட எதிர்பார்க்கலாம். ஆனால் அதை யாரும் வரையறுத்துச் சொல்ல முடியாது. எனவே குறைந்தபட்சம் உங்களை விரும்பும்படி நீங்கள் முதலில் மாற்றிக் கொள்ள வேண்டும். இதை நீங்கள் அவசியம் செய்ய வேண்டும். இப்படிச் செய்வது குழந்தைகளுக்கு சரியான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கலாம். ஆனால் அவர்கள் சரியாக வளர இதுவே உத்தரவாதம் என்று சொல்ல முடியாது.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

மகிழ்ச்சி, அன்பு, கவனிப்பு, அக்கறை, கட்டுப்பாடு கொண்ட ஒரு சூழ்நிலையை உங்களுக்கும் உங்கள் வீட்டுச் சூழ்நிலையிலும் நீங்கள் ஏற்படுத்தினால் நிச்சயமாக அவர்கள் வளர்ச்சியில் இருப்பார்கள். உங்கள் எல்லைகளுக்கு உட்பட்டு எவ்வளவு வாய்ப்புகள் உருவாக்கித்தர முடியுமோ அந்த வாய்ப்புகளை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்க வேண்டும். ஆனால் அடக்கமான குழந்தையை வளர்க்கிறீர்களா அல்லது அடங்காப் பிடாரியை வளர்க்கிறீர்களா என்பதும் மிகவும் முக்கியமானதுதான்.


எனவே, உங்கள் மனைவி கர்ப்பம் அடைந்து விட்டால் நீங்கள் உங்களையே மாற்றிக் கொள்ளும் நேரம் வந்து விட்டது என்று அர்த்தம். ஏனெனில் இன்னொரு உயிர் இப்போது உங்கள் குடும்பத்திற்குள் வருகிறது. நீங்கள் தற்போது இருக்கும் வழி உங்களுக்கே பிடிக்காத பொழுது, இன்னொரு உயிரும் அந்த வழியில் போக வேண்டாம். அல்லவா? எனவே நாம் செய்யக் கூடிய செயல்களில் விழிப்புணர்வுடன் இருப்பது மிகவும் அவசியம். சரி, நான் அவர்களுக்கு எப்படி, எதைக் கற்றுக் கொடுக்க வேண்டும்? அதற்கு நான் என்ன சொல்கிறேன் என்றால், அவர்கள் எதைப் பற்றியும் கேள்வி கேட்கும்படி நீங்கள் கற்றுக் கொடுக்க வேண்டும். ஆனால் அவர்களின் கேள்வி சந்தேக மனப்பான்மையில் இருக்கக்கூடாது, தெரிந்து கொள்ளும் மனப்பான்மையில் இருக்க வேண்டும். கேள்வி கேட்பது என்பது ஒரு நோயைப் போலவும் ஆகலாம் அல்லது ஒரு ஆரோக்கியமான செயலாகவும் முடியலாம்.

'எல்லாமே மோசம்' என்று மக்கள் ஏற்கனவே சந்தேகத்துடன் இருப்பதால்தான் கேள்வி கேட்கிறார்கள். இது ஒரு நோய். ஆனால் ஒரு கேள்வியின் அடிப்படை நோக்கம், இன்னமும் சிறிது ஆழமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதாகத்தான் இருக்க வேண்டும். உங்கள் குழந்தைகள், தங்கள் மனதில் தோன்றும் எதைப் பற்றி வேண்டுமானாலும், நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதையும் சேர்த்து, கேள்வி கேட்கலாம் என்பதைக் கொண்டு வந்தால், எதையும் சந்தேகத்தோடு பார்த்து எல்லாவற்றிலும் தப்புக் கண்டுபிடித்து ஒரு நோயைப் போலக் கேள்வி கேட்காமல் எதையும் ஆரோக்கியமான வழியில் கேட்க அனுமதித்தால், உங்கள் குழந்தை அதனுடைய அறிவைத் தொடர்ந்து உபயோகிக்கும்.

நீங்கள் இப்படிச் செய்வதால் அவன் ஒரு டாக்டர் ஆகிவிடுவான் அல்லது ஒரு இன்ஜினியர் ஆகிவிடுவான் என்று நீங்கள் நினைத்து விடக்கூடாது. ஆனால் அவனுடைய புத்திசாலித்தனம் எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கும். அவன் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க உடலளவில் அவனுக்குத் தேவையானதை யும், தேவையான கல்வியையும் எப்படியும் உங்கள் சக்திக்கேற்ற அளவு செய்வீர்கள். ஆனால் அத்துடன் அவனை எந்த அடையாளங்களும் இல்லாமல் வளர்க்க வேண்டும். அவனுடைய அறிவுத்திறனை எதனுடனும் அடையாளப் படுத்தாமல், சிக்கல் படுத்தாமல் வளர்த்தால், அவன் எதற்கும் விருப்பமுடனும், திறந்த மனதுடனும் இருக்குமாறு வளர்த்தால், அவன் தன்னுடைய வாழ்க்கையை எந்த அளவு முடியுமோ அந்த அளவு சிறப்பாக அமைத்துக் கொள்வான். அவன் வேறு யார் போலவோ ஆகா விட்டாலும் அவனால் எவ்வளவு முடியுமோ அதைச் செய்வான். ஆனால் இவையெல்லாமே அவன் தன் பாதையில் யாரை சந்திக்கிறான், எந்தெந்த சூழ்நிலைகளைப் பார்க்கிறான், ஆன்மீகச் சூழலைப் பார்க்கிறானா, போர்முனையைப் பார்க்கிறானா இவை அனைத்தையும் பொறுத்தது. ஆனால், இவையெல்லாம் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் இல்லை அல்லவா?

ஆனால் நீங்கள் அன்பு, தியானம், திறந்த மனது போன்ற சூழ்நிலைகளுடன், எதனுடனும் அடையாளப்படுத்தாமலும் அவர்களை வளர்த்தால் அவர்கள் பொதுவாகவே நன்றாகத்தான் வளர்வார்கள். ஆனால் இதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. ஆனால் உங்களால் முடிந்த அளவு சிறப்பாக நீங்கள் செயல்பட்டீர்களா என்பதுதான் விடயம். அவன் யாரையோ பார்த்து, ஏதோ ஒரு சூழ்நிலையில் சிக்கி தவறாகப் போகிறான் என்றால் அது வேறு விடயம். அது உங்கள் கையில் இல்லை. ஆனால் அவன் உங்களைப் பார்த்து தவறான வழிகளில் சென்றுவிடக்கூடாது. இல்லையா?

நீங்கள் அவர்களுக்குள் பயத்தைக் கொண்டு வந்தால், பாரபட்சத்தைக் கொண்டு வந்தால், வெறுப்பைக் கொண்டு வந்தால் அது நீங்கள் அவனுக்கு செய்யும் குற்றமாகும். ஏனென்றால் இப்போது உங்களால் அவர்கள் பாதை



**சத்குரு வாசுதேவ்**

தவறிப் போகமுடியும். இது மன்னிக்க முடியாத குற்றம். எந்த பெற்றோருமே இதைத் தன் குழந்தைக்குச் செய்யக்கூடாது. ஆனால், இது பலவிதமாக நடைபெறத்தான் செய்கிறது. நீங்கள் உங்கள் பயத்தையும், உங்களுடைய இது, உங்களுடைய அது, போன்ற உங்களுடைய குறைகளை எல்லாம் அவனுக்குள் விதைக்கிறீர்கள். உங்களுடைய எந்தப் பலவீனத்தையும் அடுத்த தலைமுறைக்கு நீங்கள் மாற்றக்கூடாது.

நீங்கள் அன்பு, தியானம், திறந்த மனது போன்ற சூழ்நிலைகளுடன், எதனுடனும் அடையாளப்படுத்தாமலும் அவர்களை வளர்த்தால் அவர்கள் பொதுவாகவே நன்றாகத்தான் வளர்வார்கள். எல்லாப் பெற்றோருமே தங்கள் குழந்தைகளை நன்றாக வளர்ப்பதற்கான திறமையைக் கொண்டிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. இது பல காரணங்களினால் இருக்கலாம். இது உங்கள் வேலையினால் இருக்கலாம். நீங்கள் எங்கு வாழ்கிறீர்கள், என்ன செய்கிறீர்கள் என்பது போல பல விடயங்கள் இருக்கலாம். எனவே குழந்தைகள் இன்னும் சிறப்பாக வளர, நிறைய இடங்கள் உருவாக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இந்த மாதிரி இடங்களை உருவாக்க தொழில் ரீதியாக யாரையும் ஆசிரியர் போல நியமித்து செய்ய முடியாது. அவர்கள் இன்னொருவர் குழந்தைக்காக தன்னைக் கொடுக்க மாட்டார்கள். எனவே இதற்கான அர்ப்பணிப்புடன் உள்ள தன்னார்வத் தொண்டர்களை வைத்துத்தான் இதை செய்ய முடியும். இது ஒரு சவாலான வேலைதான்.

ஆனால் அடுத்த தலைமுறையின் மேல்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்




AABS DON VALLEY PEST CONTROL INC.
Please Call @647.799.0575 / 1.800.828.0656




Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit Flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.




# முதுகுத்தண்டு வலிக்கு யோக மருத்துவம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## *Yoga Therapy for back*

உடலும் மனமும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயல்பட்டால் மட்டுமே மனிதன் ஆரேக்கியமாக வாழ முடியும். நவீன உலகில் மனிதன் சுகபோக வாழ்வை அடைய ஓயாமல் பொருளாதாரத் தேடலுக் குள் தன்னை உள்படுத்துவதோடு உடலில் பல நோய்களுக்கு ஆளாகி தீராத மன உழைச்சலுக்குள் தள்ளப்பட்டு அவதிப்படு பவர்களை நாம் தினமும் காணமுடிகிறது. இவ்வாறு துன்பப்படுவர்களில் பலர் இடுப்புவலி, கீழ்த்தண்டு, முதுகுவலி, கழுத்துவலி, தோள்பட்டை வலி, மூட்டுவலி போன்றவற்றிற்கு ஆளாகின்றனர்.

மாறுகிறது. பின் கழுத்துப்பகுதி வழியாக கீழிறங்கி முதுகின் அடிப்பகுதியை வந்தடைந்து பற்றிக் கொள்கிறது. அப்போது இடுப்புப்பகுதி இறுக்கமடையும். இடுப்புடன் சேர்ந்த கீழ் முதுகுத் தண்டிலும் வலி ஏற்பட ஆரம்பிக்கும். இதனால் குனிந்து நிமிர முடியாமலும், கால் தொடை தசைகள் இறுகி பயங்கரமான வலியை உண்டு பண்ணுகிறது.

இந்த கீழ் முதுகுத் தண்டுவலி (Lowre back pain) ஏற்பட அதிக குளிர்பானங்கள் அருந்துவதாலும், கணினி முன் இருந்து (Computer) பலமணிநேரம் வேலை செய்வதாலும், வாகனங்களை வெகுதூரம் ஓட்டுவதாலும் இடுப்புப் பகுதியில் இயக்கப் படுகின்ற வில்விசை நரம்பு பாதிப்படையும்.

செயல்படும் இடங்களில் அவற்றின் செயல்பாடுகள் குறைந்து போகின்றது. அத்துடன் இடுப்பு எலும்பு பகுதியிலுள்ள (மச்சை) பசைத்தன்மை உலர்ந்து விடுகிறது. இதுவும் இருந்து எழமுடியாத நிலைக்கு ஒரு காரணம்.


இந்த முதுகுத்தண்டு வலியால் பலருக்கு உணர்ச்சி நரம்புகள் பாதிப்படையும். இதனால் ஆண், பெண் இருபாலாருக்கும் தாம்பத்திய உறவில் கூட சில சிக்கல்கள் ஏற்படும். பொதுவாக பெண்களுக்கு கீழ் முகுதுவலி (Lower book pain) இருந்தால் மாதவிடாய் பிரச்சினை ஏற்படும். கர்ப்பம் தரிப்பது கூட பாதிப்படையலாம். இதனால் கர்ப்ப உறுப்புகளும் பாதிப்பு அடையும்.

முதுகுத்தண்டு வலிக்கு வாயுவின் சீற்றமும் பிரதானமான காரணமாக இருக்கிறது. இதனைத் தடுக்க உடலில் உள்ள நீரோட்டம் சீராக இருக்க வேண்டும். இதற்கு குடலை முடிந்தவரை சுத்தமாக

6. காலை உணவு கண்டிப்பாகச் சாப்பிட வேண்டும்.
7. ஒரே இடத்தில் நீண்டநேரம் இருந்து வேலை செய்பவர்கள் இடையிடையே சிறிது நேரம் நடக்க வேண்டும்.
8. இரவு உணவிற்குப்பின் உடனே உறங்குவதைத் தவிர்க்க வேண்டும்.
9. மாதவிலக்கு காலங்களில் பெண்கள் போதிய ஓய்வு எடுக்க வேண்டும். இக்காலங்களில் அதிக வேலை செய்தால் கீழ்முகுகுவலி (Lower back pain) ஏற்படும்.

நுரையீரலிலுள்ள சளியை மாற்றுவதற்கும் ரத்த ஓட்டத்தை சீராக வைப்பதற்கும் சித்த மருத்துவ முறைப்படி சுக்கு, மிளகு, திப்பிலி, பனம் கல்லக்காரம் அல்லது தேன் என்பனவற்றை சம அளவில் எடுத்து மிக்ஸியில் அரைத்து ஒரு சிறிய உருண்டை அளவில் காலையில் வெறும் வயிற்றில் 4 முதல் 6 வாரங்கள் சாப்பிட்டு வந்தால் எல்லாம் சரியாகி விடும்.









ஆண், பெண் இருபாலாரையும் பாதிக்கும் முகுதுத்தண்டுவலி பற்றி இப்போது பார்க்கலாம். நேரம் தவறிய உணவு, இரவில் காரம், புளிப்பு அதிகம் சேர்ந்த உணவு, வாயுவை அதிகரிக்கச் செய்யும் உணவு என்பவற்றால் அஜீரணம் உண்டாகின்றது. இதனால் குடலில் புளிப்புத்தன்மை அதிகரித்து வாயு சீற்றம் கொண்டு மேல்நோக்கி சிரசை அடைந்து அங்கு நீர் கோர்த்து சூலை நீராக

வில்விசை நரம்புதான் மனிதன் உட்கார்ந்து எழுவது, படுத்திருந்து எழுவது, பொருட்கள் தூக்குவது, குனிந்து நிமிர்ந்து வேலை செய்வதற்கு உதவியாக இருப்பது.

பிரபஞ்சத்தில் உள்ள நீர், காற்று, நெருப்பு போன்றவை உடலிலும் இருக்கிறது. பலவித மாறுபாடுகளினால் இவை இயல்பான தன்மையில் இருந்து விலகி சீற்றமடையும் போது உடலில் உள்ள மூலதார வாயு குடலில் உள்ள வாயுவை கழுத்து முதுகு பகுதிக்கு உந்தித் தள்ளுகிறது. இதனால் இடுப்புப் பகுதி இறுகி நரம்பும் எலும்பும் இணைந்து


வைத்திருக்க வேண்டும். மலச்சிக்கல் அஜீரணக்கோளாறு என்பன ஏற்படாது தடுப்பதுடன் சளியின் ஆதிக்கம் அதிகரிக்காது பார்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் கல்லீரல் (Liver) சீராக இயங்குமாறு அதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இவை அனைத்தையும் கவனத்தில் எடுத்தால் முதுகு வலிக்கு முடிவு கட்டலாம்.

இவற்றைப் பராமரிக்க
1. உணவுமுறை சீரான வகையில் இருக்க வேண்டும்
2. மலச்சிக்கலை அனுமதிக்கக் கூடாது
3. வாயுவை உருவாக்கும் உணவுகளைத் தவிர்த்து எளிதில் ஜீரணமாகும் உணவுகளை உண்ண வேண்டும்.
4. இரவில் அதிக காரம், புளிப்பு சேர்ந்த உணவுகளை தவிர்ப்பது நல்லது. அத்துடன் அளவிற்கு அதிகமாக உண்பதைத் தவிர்க்க வேண்டும்.
5. நார்ச்சத்து மிகுந்த பழங்களை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அதுமட்டுமன்றி யோகாசனத்திலுள்ள சில பயிற்சிகள் முதுகுதண்டை உறுதியாக்கி அங்கு உருவாகும் வலியைச் போக்க வல்லவை உதாரணமாக

1. பஸ்ஸிமொத்தாசனம் - forward bent
2. சேதுபந்தாசனம் - bridge
3. சலபாசனம் - locust
4. பாத ஹஸ்தாசனம் - Head knee pose
5. பிறை ஆசனம் - Star

என்பன எல்லாவகையான முதுகுத்தண்டு வலியையும் போக்கும் தன்மை கொண்டவை. இவற்றை முறைப்படி செய்தால் நிரந்தரமான பலன் கிடைப்பது உறுதி.

416.289.2033 after 7:00pm
416.617.5721

# வீடுகள் வாங்க விற்க......

## JUST LISTED IN AJAX








**SALEM & KINGSTON**
Bedrooms:4
Washrooms:3

People Who Are Selling & Buying House From Me, ***MY LISTING COMMISION IS FREE!!!!!!!!!***

This Offer Valied Until 30th June 2015 Only

**My listing Commision For Sellers $3500 + HST**

**GOLD CLUB WINNER 2014**




ANTONIPILLAI LOURDSON

Friendly services, Free Evolution, Free marketing, and Ect. services




FOR ONLY HOME BUYERS FREE TICKETS TO SRILANKA OR CUBA FOR MORE DETAIL CALL ME!
HONEST AND TRUST

நாளை என்பது கனவு. இன்று என்பது நிஜம்!!!!!.
நீங்களும் முதலீட்டாளர்கள் ஆகி மிகவும் குறுகிய காலத்தில் மிக அதிக லாபத்தை அடைய விரும்புகிறீர்களா? அழையுங்கள், என்னை, இலவச அதி சிறந்த ஆலோசனைகளுடனும் சகல ஏற்பாடுகளையும் மிகவும் நுண்ணியமாகவும், துல்லியமாகவும் ஒழுங்குகள் செய்து தரப்படும்.



# Lourdson Antonipillai
**Sales Representative**
**Dir: 416.738.8824**
**E-mail - lourdson29@hotmail.com**
**HomeLife / Future Realty Inc., Brokerage***
205 - 7 Eastvale Dr. Markham. ON L3S 4N8
Bus:905.201.9977
Fax: 905.201.9229

HOMELIFE HIGHER STANDARDS

* Independently Owned & Operated

# மோடியின் வெளிநாட்டுப் பயணங்களும் கையெழுத்தான ஒப்பந்தங்களும்

10ஆம் பக்கத்தொடர்ச்சி

பூட்டான், ஜுன் 16-17, 2014

ஹிமாலய பல்கலைக்கழகம் நிறுவ மோடி உறுதி. இரு நாடுகளின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்படும் கொல-ாங்சு நீர் மின் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

பிரேசில், ஜுலை 13-16, 2014

பிரிக்ஸ் வளர்ச்சி வங்கி துவக்கப்பட்டது. பிரேசிலில் நடைபெற்ற உலகக் கோப்பை கால்பந்து ஆட்டத்தையும் மோடி பார்த்தார்.

நேபாளம், ஆகஸ்ட் 3-4, 2014 ரு நவம்பர் 25-27, 2014

நேபாளத்துக்கு இந்தியா 6 ஆயிரத்து 250 கோடி ரூபாய் சலுகை கடன். இரு நாடுகளிடையே 3 ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. நவம்பர் 2014இல் காத்மண்டுவில் நடைபெற்ற சார்க் மாநாட்டில் கலந்துகொண்டார்.

ஜப்பான், ஆகஸ்ட் 30, 2014

வாரணாசியை நவீன நகரமாக மாற்றுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. ராணுவம் உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒத்துழைப்பதற்காக 5 இரு தரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. அடுத்த 5 ஆண்டு காலத்தில் இந்தியாவில் 2 லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வதாக ஜப்பான் வாக்குறுதி அளித்தது.

அமெரிக்கா, செப்டம்பர் 26-30, 2014

இந்தியா - அமெரிக்கா இடையிலான அணுசக்தி ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதில் கடந்த 7 ஆண்டு களாக நீடித்து வந்த தடை நீங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

மியான்மர், நவம்பர் 11-13, 2014

கிழக்காசிய நாடுகள் கூட்டமைப்பு மாநாட்டில் கலந்துகொண்டார்.

அவுஸ்திரேலியா, நவம்பர் 14-18, 2014

ஜி20 மாநாட்டில் கலந்துகொண்டார். 5 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

பிஜி, நவம்பர் 19, 2014

பிஜிக்கு இந்தியா 75 மில்லியன் டொலர் கடனுதவி.

சிசெல்ஸ் தீவு, மார்ச் 10 – 11, 2015

சிசெல்ஸ் தீவுக்கு மரபுசாரா எரிசக்தி, உள்கட்டமைப்பு வளர்ச்சி, கடற்படை தளவாடங்கள், மின்னணு கடற்படை சாதனங்கள் வழங்குவது என 5 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. மேலும், சிசெல்ஸ் நாட்டு வளர்ச்சிப் பணிகளுக்கு இந்தியா 500 கோடி ரூபாய் நிதி வழங்க உறுதியளித்தது.



மோரீசியஸ், மார்ச் 11-13, 2015

மொரீசியஸின் கடலோரப் பாதுகாப்பிற்காக இந்தியாவில் வடிவமைக்கப்பட்ட பாராகுடா ரோந்துக் கப்பலின் சேவை துவக்கப்பட்டது. மொரீசியஸுக்கு இந்தியா 500 மில்லியன் டாலர்கள் கடனுதவி. கடல் சார் பொருளாதாரம் உள்பட ஐந்து ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

இலங்கை, மார்ச் 13–14, 2015

வீசா நீட்டிப்பு, சுங்கத்துறையில் ஒத்துழைப்பு, இலங்கையில் தாகூர் கலையரங்கம் கட்டுவது மற்றும் இளைஞர்கள் கல்வி தொடர்பானது என நான்கு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இந்தியாவால் கட்டப்பட்ட 27,000 வீடுகள் பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டது. மேலும் 47,000 வீடுகள் அங்கு கட்டித் தரப்படும் என்று மோடி அறிவித்தார்.

சிங்கப்பூர், மார்ச் 29, 2015

சிங்கப்பூர் முன்னாள் பிரதமர் லீ குவான் யூவின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டார்.

பிரான்ஸ், ஏப்ரல் 9–12, 2015

36 ரபேல் ரகப் போர் விமானங்களை வாங்குவது, மகாராஷ்டிராவின் ஜெய்தாபூரில் அணுமின் நிலையம் அமைப்பது, இந்திய - பிரெஞ்சு கூட்டுத் தயாரிப்பான மேகா ட்ராப்பிக்ஸ் செயற்கைக்கோளில் இருந்து தகவல்களைப் பெறுதல் உட்பட இரு நாடுகளுக்கும் இடையே மொத்தம் 17 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. பிரான்ஸ் நிறுவனங்கள் மூலம் இந்தியாவில் ரூ. 6,000 கோடி வரை முதலீடு செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஜெர்மனி, ஏப்ரல் 12-14, 2015

ஹானோவர் நகரில் தொழில் கண்காட்சியை மோடி துவக்கி வைத்தார்.

கனடா, ஏப்ரல் 14-16, 2015

இந்திய அணு உலைகளுக்கு யுரேனியம் வழங்க கனடா ஒப்புக்கொண்டது.

சீனா, மே 14-16, 2015

பீஜிங்கில் 24 இருதரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. ஷாங்காயில் நடைபெற்ற இந்திய, சீன தொழிலதிபர்கள் மாநாட்டில் சுமார் ரூ.1.40 லட்சம் கோடி மதிப்புடைய 21 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

தென்கொரியா, மே 18-19, 2015

வரி மற்றும் வருமானத்தில் முறைகேடுகளைத் தடுக்க இரட்டை வரி விதிப்பு முறையைத் தவிர்க்க இந்தியா-தென் கொரியா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் உட்பட இரு நாடுகளுக்கும் இடையே 7 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இந்தியாவின் ஸ்மார்ட் சிட்டி திட்டம், ரெயில்வே மற்றும் மின்சார உற்பத்தி உள்ளிட்ட முக்கியத் துறைகளின் கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்காக ஆயிரம் கோடி அமெரிக்க டாலர்களைக் கடனாக வழங்குவதாகத் தென் கொரியா அறிவித்தது.

மங்கோலியா, மே 17, 2015

இரு நாடுகளுக்கிடையே 14 ஒப்பந்தங்கள் கையெழுத் தானது. மங்கோலியாவின் பொருளாதார விரிவாக்கம் மற்றும் உள்கட்டமைப்பு பணிகளுக்காக இந்தியா சுமார் 6 ஆயிரம் கோடி ரூபாய் நிதியுதவி.





CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT

" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb

Commercial

. We Clean Commercial Linens, Aprons, & Towels• We Clean Uniforms Dry Clean or Wash & Dry

. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc

STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383



OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm

(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# RemaxShan.com

## Best Buy!!!

**Scarborough** Markham/Shepperd

**Convenience & Speciality Store For Sale**


**$79,900**

**Profitable Business over 15 years. Ideal for a family**

**Incl. Stocks**

EXCLUSIVE

**Scarborough** Morningside/Shepperd



**$399/Sqf**

1000Sqf. Retail Unit. Finished interior. 2 entrances. Can be used as 2 units. One tenant willing to stay. Textiles, Catering, Café, & more usages permitted.

**Coomercial/Retail**

**Whitby**

**Thickshon/Carnwith**



**$675,000**
Detached
**5** Bed **4** Bath

**Scarborough**


**Markham/Shepperd**




**$479,900**
Detached
4+1 Bed **2** Bath

**Oshawa**


**Sincoe/Conlin**



**$398,900**
Detached, Close to UOIT
**3** Bed **3** Bath

**Oshawa**


**Sincoe/Conlin**



**$599,999**
Detached, Close to UOIT
**4** Bed 5 Bath

**Oshawa**


**Sincoe/Conlin**



**$409,900**
Detached, Close to UOIT
**4+2** Bed **4** Bath

**Oshawa**

**Ritson/King**



**$224,900**
Detached
**3** Bed **1** Bath

## MORTGAGE?

### NO PROBLEM

BMO RBC CIBC TD

**PRIVATE LENDING ALSO AVAILABLE**



**Shan** Thayaparan
Sales Representative

DIR **416. 567. 7675**
shan@remaxshan.com

#1 RE/MAX

**RE/MAX VISION**
REALTY INC., BROKERAGE*

*Independently Owned & Operated. Not inteded to solicit

BUS 416.321.2228
#1 - 2210 Markham Rd.
Scarborough, ON M1B 5V6

# விமானச் சாகசக் காட்சிகள் (Air Shows)

## வான் சறுக்கல் (Gliding)

வான்சறுக்கலும் ஒரு பொழுதுபோக்கு விளையாட்டாகும். இதில் எந்திரத்தைப் பாவியாது காற்றின் உதவியுடன் விமானம் செலுத்தப்படும்.

1920துகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டுவரும் வான்சறுக்கல் நாளடைவில் ஒரு போட்டிக் குரிய விளையாட்டாகவும் வளர்ந்துள்ளது. பல நாடுகளில் உள்ளக மற்றும் தேசியப் போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

இப்போட்டிகளில் வெற்றிபெறுவதற்கு விமானிகளுக்கு வான-்லைபற்றிய அறிவும் அதனைப்பயன்படுத்தி வான்சறுக்கிகளைச் (Gliders) செலுத்தும் திறமையும் மிகவே வேண்டப்படுகின்றன. வாய்ப்பான வானிலையில் 1000 கி.மீற்றர் தூரத்துக்கும் விமானிகள் வான்சறுக்கிகளைச் செலுத்தியுள்ளனர்.

## வானரங்கத்தின் தனித்தன்மைகள்

வானரங்கத்தில் நாம் கவனிக்கவேண்டிய தனியியல்புகள் பல உள்ளன:

(1) வானரங்கத்துக்கு எல்லை வரையறை கிடையாது.
(2) நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு வானிலை வாய்ப்பாக இருத்தல் வேண்டும். உதாரணமாக, பட்டம் விடுவதற்கு காற்று வீசுதல் வேண்டும், வாண வேடிக்கைக்கு மழை பெய்யாதிருத்தல் வேண்டும்.
(3) நிகழ்ச்சிகளை அவற்றிற் பயிற்சிபெற்ற வல்லாளரே நடத்துகின்றனர். அவர்களே வானரங்க நடிகர்களாவர்.
(4) சில நிகழ்ச்சிகளில் நடிகர்களைப் பார்க்கமுடியாதிருக்கும். உதாரணமாக, விமானம் ஓட்டும் விளையாட்டில் ஓட்டும் வல்லாளர்களைப் பார்வையாளராற் பார்க்கவியலாது. சில சமயங்களில் வாணவேடிக்கை நிகழ்ச்சிகளிலும் அதனை




நடத்துகின்றவரைப் பார்க்கமுடியாமல் இருக்கும். பட்டங்கள் ஏற்றும் நிகழ்ச்சியில் மட்டும் ஏற்றுகின்றவரைப் பார்வையாளர் பார்க்கக் கூடியதாக இருக்கும்.
(5) பார்வையாளர் நிலத்திலே, அதாவது கீழேதான் நிற்கமுடியும்.
(6) அதனால் அவர்கள் எப்பொழுதும் மேல்நோக்கியே பார்க்கவேண்டியிருக்கும்.
(7) நிலத்தில் விரும்பினால் இருக்கலாம். ஆனால் இருக்கைகள் இருக்கமாட்டா.
(8) நில அரங்கங்களில் பார்வையாளருக்குக் கட்டுப்பாடுகள் அதிகம்.
(9) வானரங்கத்தில் பார்வையாளர் நிற்குமிடம் பரந்த வெளியாக இருக்கும். நான்கு சுவர்களுக்குள் அவர்கள் அடங்கி இருக்க வேண்டிய தில்லை. இருந்த ஆசனத்திலேதான் இருக்க வேண்டு மென்றோ சத்தம் செய்யாமல் இருக்க வேண்டுமென்றோ இல்லை. சுதந்திரமாக அவர்கள் நடந்து கொண்டோ இருந்து கொண்டோ அல்லது மற்றவருடன் சத்தம்போட்டுப் பேசிக்கொண்டோ காட்சிகளைக் கண்டுகளிக்கலாம். வாணவேடிக்கை நிகழ்ச்சியைப் பார்க்கையில் மட்டும் சற்றுக் கவனமாக இருத்தல் வேண்டும்.

(10) எல்லாவற்றுக்கும் மேலாக நுழைவுச்சீட்டு வானரங்க நிகழ்ச்சிகளுக்கு இல்லை.

வானரங்கம் திறந்தவெளி அரங்கமன்று. திறந்தவெளி அரங்கம் என்று நாம் சொல்வது சுவர்கள் இல்லாத ஒரு வெளியரங்கத்தையாகும். வானத்தில் நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டுவதையே வானரங்கம் குறிக்கின்றது. இதில் நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டுகின்றவர்தாம் நடிகர்கள். கீழே நின்று பார்ப்பவர்தாம் அவையோர்.

வானரங்கம் இயற்கையின் நன்கொடை. இந்த வித்தியாசமான, விசாலமான அரங்கத்தில் மனிதர் செய்துவரும் நான்கு நிகழ்ச்சிகளை மட்டுமே இப்போதைக்கு இனங்காண முடிந்தது. வருங்காலத்தில் இன்னும் என்னென்ன விந்தைகள் வானரங்கத்தில் நடக்கவுள்ளனவோ யாருக்குத் தெரியும்?



கவிஞர் வி. கந்தவனம்




# அன்புடைமை - 20

அன்பான வாசகர்களே! கடந்த இதழில் நண்பர்களிற்கிடையே நல்ல நட்பு ஏற்படுவதற்கு அன்புடைமை எவ்வளவு முக்கியமானது என்பது பற்றி உரையாடியிருந்தோம். அன்புடைமையின் விசேடமான ஒரு வடிவமாகக் காதல் கருதப்படுகின்றது. காதலைப் பற்றி இந்த இதழில் உரையாடிக் கொள்வோம். காதலில் இருவருக்கிடையே உன்னதமாக அன்பு பரிமாறப்படுகின்றது. ஒருவரை ஒருவர் விரும்புவதைக் காதல் என்கின்றோம். காதலர்களுக்கிடையில் உண்மையான அன்பு முழுமையாக இருத்தல் அவசியமாகின்றது. ஒருவர் மீது இன்னொருவர் கொள்ளும் பிரத்தியேகமான அன்புப் பரிமாற்றமாகக் கூட காதலை நாங்கள் வர்ணித்துக் கொள்ளலாம். 'Immature Love says I Love you because I need you; Mature love says I need you because I love you' என்ற எரிச் பொரம் (Erich Fromm) அவர்களின் ஆங்கில முதுமொழியை எடுத்துக் கொள்வோம். முதிர்ச்சி அடையாத காதலில் நான் உன்னை காதலிக்கின்றேன் நீ எனக்கு தேவை என்பதால் என்றும் முதிர்ச்சி அடைந்த நீ எனக்குத் தேவை நான் உன்னைக் காதலிப்பதால் என்று நாம் தமிழில் விளக்கம் கொள்ளலாம். இது உண்மைக்காதல் ஒரு தேவையை முன்னிட்டு வருவதில்லை என்பதை வலியுறுத்துகின்றது. "Love isn't something you find, Love is something that finds you" என்ற லொறற்றோ யங் (Loretta Young) அவர்களின் ஆங்கில முதுமொழியை எடுத்துக் கொள்வோம். 'காதல் என்பது நீங்கள் தேடுவதல்ல. அது உங்களைத் தேடி வரும்' என்பது தமிழில் இந்த முதுமொழிக்கான விளக்கம் ஆகும். இவ்வாறான காதலைத்தான் நாங்கள் உண்மையான




காதல் என்று வர்ணிக்கின்றோம். "Love is composed of a single soul inhabiting two bodies" என்பது தத்துவ விஞ்ஞானி அரிஸ்ரோட்டில் (Aristotle) அவர்களின் ஆங்கில முதுமொழி. காதல் என்பது இரு உடல்கள் ஓர் உயிராகச் சேர்வது என்ற கருத்தைக் கொடுக்கின்றது. சினிமா, பாடல், இலக்கியம், பொழுதுபோக்கு என எல்லாவற்றிலும் இடத்தைப் பிடித்துக் கொள்ளும் விடயமாகக் காதல் உள்ளது. அன்புடைமை என்ற தொடர்கட்டுரையில் காதல் பற்றிப் பேசிக்கொள்வது மிகவும் முக்கியமானது. கல்லூரிகளில் மாணவர்கள் தமது கல்வியில் கவனம் செலுத்தாது காதல் வயப்பட்டுக் கொள்வதை நாங்கள் சாதாரணமாகக் காண்கின்றோம். இவற்றில் ஒரு குறைந்த சதவீதமான காதல் மட்டும் நிலைத்து இருப்பதையும் காண்கின்றோம். இவ்வாறான காதலை முற்றாக் காதல் என்று சொல்லலாம். ஒருவர் மட்டும் ஒருதலைக் காதலாய்க் காலித்து தமது வாழ்க்கையைத் தொலைத்துக் கொள்வதையும் காண்கின்றோம். ஆனால் அதே நேரத்தில் கல்லூரிக் காலத்துக் காதல் நீடித்து நிலைத்து இருப்பதையும் நாங்கள் காண்கின்றோம். காதல் காரணமாக தமது உயிரை மாய்த்தவர்களும் உண்டு. எவ்வாறானாலும் காதல் என்பது ஒரு நல்ல உணர்வு என்பதுடன், அன்புடைமை என்ற சொத்து காதலர்களுக்கிடையில் நூற்றுக்கு நூறு வீதம் இருக்க வேண்டியது அவசியமாகின்றது. காதல் என்பது ஒரு நடவடிக்கையாக வெளிப்படுத்தப்பட்டு ஒரு உணர்ச்சியாக உணரப்படுகின்றது. காதலர்களுக்கிடையில் இசைந்து போகும் தன்மை, ஒரே விதமான சிந்தனைப் போக்கு, விட்டுக் கொடுப்பு, ஆழமான அன்பு, ஒருவர் மற்றவரின் நலனில் அதிக அக்கறை எடுத்தல் போன்றவை இருத்தல் முக்கியமானது.




உண்மையான காதல் எண்ணற்ற தடைகளைத் தாண்டி நீண்ட காலம் பயணித்து திருமணப் பந்தத்தில் இணையச் செய்து நல்ல பெறுபேறுகளைக் கொடுக்கும் ஓர் உறவு முறையாகப் பார்க்கின்றோம். ஆனால் எல்லாக் காதல் திருமணங்களும் நிலைப்ப தில்லை என்பது வருத்தத்திற்குரியது. இவற்றில் ஒரு பொதுவான பிரச்சினையே காரணம் என்று சொல்லமுடியாத அளவிற்கு வேறுபடுகின்றன. திருமண முறிவுகள்: காதல் திருமணம், பேச்சுத் திருமணம் இரண்டிலுமே ஏற்படுகின்றன. ஆழமான அன்பு இருக்கும் பொழுது ஏனைய காரணங்களால் ஏற்படும் பாதிப்புக்களையும் மீறி நிலைத்து திருமணப் பந்தம் இருக்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உண்டு. ஒருவர் மற்றவரை மகிழ்ச்சிப் படுத்துவதில் அதிக அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும். காதல் பற்றிச் சங்க கால இலக்கியங்கள் பல எடுத்துரைக்கின்றன. சங்க கால இலக்கியத்தில் காதல் என அழைக்கப்பட்டுத் தற்காலத்தில் காதல் திருமணம் என்று அழைக்கப்படுகின்றது. காதல் மலரும் பொழுது கண்டதும் காதல் என்று இருக்காது மெல்ல மெல்ல வந்த காதல் நீடித்து நிலைக்கும் என்ற கருத்தும் உள்ளது. காதல் வெறும் கவர்ச்சியால் வராது ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து எற்படும் காதலே நல்லது என்பதும் பொதுவான கருத்து.

எல்லா உயிருக்கும் காதல் இயல்பாக உள்ளது என்றும் காமத்தின் திறவுகோல் காதலாக உள்ளது என்றும் காதலும், காமமும் சேர்ந்து ஓர் உயிர்த்தொடர்ச்சிக்கு வித்திடுகின்றன என்றும் சொல்லப்படுகின்றது. காம உணர்வை முன்னிலைப்படுத்தி ஏற்படும் காதலும் உகந்ததல்ல என்பது நாம் எல்லோரும் அறிந்த பொதுவான கருத்து. காதலர்களுக்குள் இயல்பாக காம உணர்வு ஏற்படுவதும் ஒரு பொதுவான ஓர் இயல்பு. ஒரு காதலனும், காதலியும் தமக்கு இயல்பாகவே ஏற்படும் காம உணர்வினை மிகவும் கவனமாகக் கையாள்வது மிகவும் முக்கியமானதாக உள்ளது. இப்பொழுது பாலியல் தொடர்பான கல்வியும், விழிப்புணர்வும் பாடசாலைகளில் சிறு வயதில் இருந்தே போதிக்கப்படுவதால் இவ்வாறான காம உணர்வினால் தமக்குப் பாதிப்பு ஏற்படாது பாதுகாத்துக் கொள்வதில் கடினம் இருக்காது. ஆனாலும் ஆங்காங்கே இவ்வாறான உணர்வுகளினால் பாதிக்கப்படத்தான் செய்கின்றார்கள்.

அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.

நன்றி. வணக்கம்.

தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தம்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |


Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university.
Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at
Scarborough & Stouffville
Contact: 647.340.9490/ 416.732.2228



# கனடாவில் களைகட்டும் மகளிர் உலகக்கிண்ண கால்பந்து போட்டிகள்

மகளிர் உலகக்கிண்ண கால்பந்து போட்டிகள் கனடாவின் எட்மன்ரன், ஒட்டாவா, வினிபெக், வன்கூவர், மொன்ரன், மொன்றியல் ஆகிய நகரங்களில் நடைபெறுகின்றன. இறுதிப் போட்டி ஜுலை 05, 2015இல் வன்கூவரில் நடைபெறவுள்ளது. நான்கு வாரங்கள் நடைபெறும் இந்தப் போட்டியில் மொத்தம் 24 அணிகள் பங்கேற்கின்றன. இந்த முறை 8 அணிகள் கூடுதலாக பங்கேற்றுள்ளன. 24 அணிகளும் பிரிவுக்கு 4 அணிகள் வீதம் 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.



ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகளும், தவிர 3ஆவது இடத்தைப் பிடிக்கும் சிறந்த 4 அணிகளும் நொக் அவுட் சுற்றுக்கு தகுதிபெறும். முதல் ஆட்டத்தில் கனடாவும், சீனாவும் எட்மன்ரன் கொமன்வெல்த் மைதானத்தில் ஜுன் 06, 2015இல் இரண்டாவது ஆட்டத்தில் நியூசிலாந்தை நெதர்லாந்து சந்தித்தன. இதில் நெதர்லாந்து 1 - 0 கோலால் வெற்றிபெற்றது. கனடா இரண்டாவது போட்டியாக ஜுன் 11, 2015இல் எட்மன்ரன் கொமன்வெல்த் மைதானத்தில் மோதி, போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப்போட்டிகளை பார்ப்பதற்காக இதுவரை 10 லட்சம் ரிக்கெற்றுகள் விற்றுக்கப்பட்டுள்ளன.





சிறந்ததொன்றில் முதலிடுங்கள்.

உங்களுடைய எதிர்காலத்துக்காகவும் உங்களுடைய மாகாணத்தின் எதிர்காலத்துக்காகவும் Ontario Savings Bondsல் முதலிடுங்கள். இது, மாகாணத்தால் உறுதியளிக்கப்பட்ட, பாதுகாப்பான, வெல்திறன்மிக்க வட்டி வீதம் கொண்ட நெகிழ்தன்மையான முதலீடு என்பதில் நீங்கள் நிச்சயமாக ஆறுதலாக இருக்கலாம்.

**நீங்கள் வாழும் இடத்தில் முதலிடுங்கள். ஜூன் 1 முதல் 22 வரை கிடைக்கின்றது.**

**விரைவுபடுத்தல் வீத முறி**
இதன் 5-வருட காலத்துக்கும் ஊடாக ஒவ்வொரு வருடமும் வெல்திறன்மிக்க இந்த வட்டி வீதம் தொடர்ந்து அதிகரிக்கும். ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நீங்கள் மீட்டுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| 1வது வருடம் | 0.75% |
| 2வது வருடம் | 0.90% |
| 3வது வருடம் | 1.05% |
| 4வது வருடம் | 1.20% |
| 5வது வருடம் | 1.35% |

**மாறுவீத முறி**
தொடர்ந்து வெல்திறனுடன் இருப்பதற்காக, புதிய வீதம் ஒன்று, 3-வருட காலத்துக்கு வருடாந்தம் வழங்கப்படுகிறது. நீங்கள் வருடாந்தம் மீட்டுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| தற்போதைய வீதம் | 0.80% |

**நிலையானவீத முறி**
முன்னமைக்கப்பட்ட வெல்திறன்மிக்க ஒரு வட்டி வீதத்தை, முதிர்வின் முடிவு காலம் வரை அனுபவியுங்கள்.

| | |
|---|---|
| 3-வருட நிலையானவீத முறி | 0.90% |
| 10- வருட நிலையானவீத முறி | 2.35% |

ontario.ca/savingsbonds • 1-888-212-BOND (2663) • TTY: 1-800-263-7776

ஒன்ராறியோ அரசாங்கத்தால் பணம் செலுத்தப்பட்டது.

Ontario Savings Bonds

Ontario


சர்வதேச கால்பந்து சம்மேளனத்தில் (FIFA) நடைபெற்ற மிகப்பெரிய ஊழல், கால்பந்து உலகை உலுக்கியிருக்கும் நிலையில் இந்தப் போட்டி தொடங்குவதை நேர்மறையானதாக பார்க்கிறேன் என்று கனடா கால்பந்து சங்கத்தலைவர் விக்ரர் மான்டாக்லியானி தெரிவித்துள்ளார். ஊழல் புகார்களுக்கு இடையே பதவி விலகிய பிபா அமைப்பின் தலைவர்: 40 ஆண்டு பந்தம் முடிவுக்கு வந்த சோகம்! தொடர் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு இடையே பிபா அமைப்பின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக செப் பிலாட்டெர் அறிவித்துள்ளார். சுவிட்சர்லாந்தை சேர்ந்த செப் பிலாட்டெர் (Sepp Blatter) பிபா அமைப்பின் தலைவராக 1998ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த 17 ஆண்டுகளாக பிபாவின் தலைவராக செயல்பட்டுவருகிறார். இந்நிலையில் கடந்த ஆண்டு நடைபெற்ற உலககோப்பை கால்பந்து போட்டிகளில் ஊழல் நடந்திருப்பதாக புகார் எழுந்துள்ளது. இந்நிலையில் பிபா அமைப்பின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக செப் பிலாட்டெர் அறிவித்துள்ளார். ஜுரிச்சில் நடைபெற்ற பிபா மாநாட்டில் கலந்துகொண்ட பிலாட்டெர் பேசுகையில், கடந்த 40 ஆண்டுகளாக எனக்கும் கால்பந்து மற்றும் பிபா அமைப்புக்கும் இடையே பிரிக்கமுடியாத பந்தம் இருந்துவருகிறது. பிபா அமைப்பை மற்ற அனைத்தையும் விட அதிகமாக நேசிக்கிறேன். தற்போது தலைவர் பதவியில் இருந்து விலகுவது என்று முடிவு செய்துள்ளேன், எனினும் அடுத்த தலைவரை தேர்ந்தெடுக்கும் வரை இந்த பதவியில் தொடரவுள்ளேன். பிபா அமைப்பின் தலைவருக்கான தேர்தலை உடனே நடத்தவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். ஊழல் கைது விவகாரத்தை ஊதித்தள்ளிய பிளாட்டர்: 5வது முறையாக 'பிபா' தலைவரானார்.

சர்வதேச கால்பந்து கூட்டமைப்பின் (பிபா) தலைவராக செப் பிளாட்டர் 5ஆவது முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். வரும் 2018இல் ரஷ்யா, 2022இல் கத்தாருக்கு உலகக்கிண்ண கால்பந்து

தொடர்ச்சி 26ஆம் பக்கம்

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்

இரண்டாம் உலகப்போர் பெரும் அழிவுகளை, வடுக்களை மனித குலத்திற்கு ஏற்படுத்தி இருந்தாலும், போரின் பின்னராக பல்துறை வளர்ச்சியையும் உலகினருக்குக் கொடுத்தது என்பது உண்மை. இரண்டாம் உலகப் போரின் காலத்தில் ஜெர்மனியர் இரகசியமாக அணுகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனாலும் அவர்களால் அதனைச் செய்து முடிக்க முடியவில்லை. இதைவிட இன்னொரு ஆச்சரியமான விடயம் என்னவெனில் ஹிட்லரின் விஞ்ஞானிகள் இரகசியமாக நேரப்பொறியையும் (Time machine) கண்டு பிடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள் என ஆய்வாளர்கள் சொல்லுகின்றார்கள். இன்னமும் ஒருபடி மேலே போய், ஜெர்மனியர்கள் ஒரு 'நேரப்பொறி' ஒன்றினைக் கண்டு பிடித்திருந்தார்கள் என்றும், அப்பொறியில் ஹிட்லரும், அப்பொறியினை நிர்ணயித்த விஞ்ஞானியும் வேறு ஒரு காலத்திற்குள் பயணப்பட்டு விட்டார்கள் எனவும் கூறும் சில ஆய்வாளர்கள் உள்ளனர். போரின் போது தற்கொலை செய்து கொள்ளப்பட்டவர் எனக் கருதப்படும் ஹிட்லர் உண்மையில் ஹிட்லரைப் போலிருந்த வேறு ஒருவரெனவும் அவர்கள் கூறுகின்றார்கள்.

வேற்றுக் கிரக மனிதர்கள், பறக்கும் தட்டுகள் போன்ற விவகாரங்களில் அக்கறையுடன் ஆராய்ந்து வருபவர்கள். தங்களது பார்வையில், ஹிட்லரின் விஞ்ஞானிகள் இரகசியமாக நேரப்பொறியினைக் கண்டு பிடிக்க முயற்சி செய்த இடம் வெறுமையாகக் காணப்பட்டது எனக் கூறுகின்றார்கள். ஜெர்மனியின் பகுதிக்குள் இருந்த தேவாலயம் ஒன்றினை அடுத்திருந்த காட்டுப் பகுதியினுள், தடுக்கப்பட்ட பிரதேசம் என்ற முத்திரையுடன் அவ்விடம் இயங்கி வந்ததாகவும் கூறுகின்றார்கள். எந்தவொரு பொருளும் இல்லாமல், துப்பரவாக வழித்தெடுக்கப்பட்ட வெறுமையான பெரிய மண்டபம் போல இவ்விரகசிய இடம் காணப்பட்டதாம். நேரப் பொறியினைக் கண்டுபிடிக்கும் ஆய்வுகள் நடந்து கொண்டிருந்த காலத்தில் அப் பகுதிக்கு ஏதோ ஒரு காரணத்திற்காகச் சென்ற ஜெர்மனிய இராணுவ அதிகாரி ஒருவர் தற்செயலாக அப்பொறியினைக் கண்டதாகப் பிந்நாளில் நேசநாடுகளின் விசாரணையில் கூறியதாகவும் தகவல் உண்டெனக் கூறுகின்றார்கள். அவருக்கு அவ்வேளையில் நேரப்பொறியினைப் பற்றிய விபரம் ஏதும் தெரியாது எனக் கூறினாராம். கிட்டத்தட்ட ஒரு பெரிய மணியின் வடிவில் அந்நேரப்பொறி இருந்ததாக அவர் கூறியிருந்தாராம்.

ஜெர்மனியரின் அணுக்குண்டுத் தயாரிப்பு, நேரப்பொறியிற்கான முயற்சிகள் பற்றிய விபரங்களும் வியாக்கியானங்களும் ஆய்வாளர்களிடையே ஏராளம் உண்டு. பலவிதமான ஆதாரங்களுடன் தங்கள் தங்கள் வாதங்களை அவர்கள் இப்போது முன்வைக்கிறார்கள். மிகமிக சுவாரசியமான அவ்விடயங்களை இப்பகுதியில் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில் நாங்கள் செல்லும் பாதையில் தெரிகின்ற அளவோடு மட்டுமே அவற்றினை, எங்களுக்குத் தேவையான அளவில் மட்டுமே தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

இப்படியான ஜெர்மனியரின் அருமையான அறிவியல் விபரங்கள் எல்லாம் அமெரிக்கர்களிடமும், இரசியர்களிடமும் சென்றதினாலேயே அவர்கள் இரு பகுதியினரும் போட்டி போட்டுக்கொண்டு சந்திரனை நோக்கி ஓடினார்கள் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இவற்றின் துணை கொண்டும் தமது ஆய்வுகளின் முடிவுகளைக் கொண்டும் இரசியர்களும் அமெரிக்கர்களும் அம்புலிக்கு செல்லும் முயற்சியில் வெற்றி கண்டார்கள் என்பது இப்போது பேசிக் கொள்கிறார்கள். இன்னமும், அம்புலிக்கு அப்பாலும் செல்வதற்கான துணிச்சலைக் கொடுத்ததும் இந்த முயற்சியின் வெற்றியே எனவும் கூறுகின்றார் கள். இவை மட்டுமல்ல, அம்புலிப் பயணங் களின் வெற்றியில் இன்னமும் பல இரகசி யங்கள் இருக்கின்றன என அவர்கள் கூறுகின்றார்கள் அவற்றினைப் பார்ப்பதற்கு முன்னராக அம்புலி பயண விபரங்களை இன்னமும் கொஞ்சம் தெளிவாகப் பார்ப்போம். ஆரம்பத்தில் இரசியர்களின் லூனா விண்கலப் பயணங்களே அடுத்தடுத்து வெற்றியைக் கொடுத்துக் கொண்டிருந்தன. இரசியர்கள் சந்திரத் தரையில் மாதிரிகளைக் கூடப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் அமெரிக்கர்களின் முயற்சிகள் ஆரம்பத்தில் பெரும் தோல்விகளையே சந்தித்துக் கொண்டிருந்தன. அவர்களைப் பொறுத்தவரையில் அப்போது அம்புலிப் பயண வெற்றி என்பது சிம்ம சொப்பனமாகவே இருந்தது. இப்படியாக இருக்கையில் அமெரிக்கர்களின் அப்பொலோ 8 (Apollo) அமெரிக்கர்களின் அம்புலிப் பயணத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்து விட்டது. அமெரிக்கர்களின் அப்பொலோ 8 சந்திரனுக்குச் சென்று அதனை வலம் வந்துவிட்டுப் பக்குவமாக புவியிற்குத் திரும்பியும் விட்டது. எப்படி அமெரிக்கர்கள் அதனைச் சாதித்தார்கள் என்பது இன்னமும் வெளிவராத அரசியல் இரகசியமாகவே உள்ளது. ஆனால் இதன் தொடர்ச்சியாக, மனித குலத்தின் பயணங்களின் சரித்திரத் தில், அறிவியல் வளர்ச்சியின் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் எழுதப்படக் கூடிய, எழுதப்பட்ட சம்பவமும் நடந்தேறியது. அப்பொலோ 11இல் சென்ற நீல் ஆம்ஸ்ரோங் என்ற அமெரிக்கர் சந்திரனில் இறங்கி, அங்கு மனிதனின் கன்னி நடையை நடத்தி, சந்திரனின் மண்ணில் கொஞ்சத்தைக் கிள்ளிக் கொண்டு தனது கூட்டாளிகளுடன் புவியிற்குப் பக்குவமாகத் திரும்பினார். சந்திரத் தரையில் மனிதன் காலடி வைக்கவில்லை, வைக்க முடியாது எனச் சிலர் கூறுகின்ற போதிலும் நீல் ஆம்ஸ்ரோங்கும் அதன் பின்னராகச் சில அமெரிக்கர்களும் சந்திரனில் உலவிவிட்டு வந்தார்கள் எனப் பலர் நம்புகின்றார்கள். அமெரிக்கர்களுடன் போட்டி போட்டிக் கொண்டிருந்த இரசியர்கள் கூட, சந்திரனுக்கு மனிதன் சென்று திரும்பி வந்ததைப் பெருமையாகக் கூறுகின்றார்கள். ஆனால் ஆரம்பத்தில் சந்திரப் பயணங்களில் பெரும் திணறலடைந்த அமெரிக்கர்களினால் இது எப்படிச் சாத்தியமானது என்ற கேள்வி ஒரு சிலருக்கு எழுந்தது. அப்பொழுதுதான் எங்களது 'அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்' அம்புலிப் பயணங்களும் அவற்றின் வெற்றிகளும் என்ற கதைக்குள் நுழைகிறார்கள்.



எப்படியெனப் பாருங்கள்.

அன்று நீல் ஆம்ஸ்ரோங்கை அம்புலித் தரையில் இறங்கி நடக்கச் செய்தது, அந்நியர்கள் அமெரிக்கர்களுக்கு ஏதோ ஒரு வகையில் கொடுத்த அறிவியல் உதவிதான் என அடித்துக் கூறுகின்றார்கள் சில ஆய்வாளர்கள். அவர்களது அறிவியல் உதவியும், தொழில்நுட்ப உதவியும் அமெரிக்கர்களுக்குக் கிடைத்திராதுவிடில் அவர்களால், சந்திரத் தரையில் இறங்கியும் இருக்க முடியாது. இன்று விண்வெளியில் அம்புலிக்கு அப்பாலும் பறந்து செல்லவும் முடியாது என்கிறார்கள். இதற்கான ஆதாரங்கள் தங்களிடம் உள்ளதெனவும் கூறுகின்றார்கள். அமெரிக்க விஞ்ஞானிகள் இதற்கு 'ஆம்' என்று கூறவில்லை. ஆனால் இதுவரையில் இல்லை என்று மறுத்துக் கூறவும் இல்லை என்றே தெரிகிறது. அல்லாமலும் அக்காலத் தில் அம்புலிப் பயண விவகாரங்களில் அக்கறையுடனும், ஆர்வத்துடனும் செயற்பட்ட

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 26ஆம் பக்கம்

IB FAST TRACK SUMMER PROGRAM 2015

Come and join our 1-month fast track program from grades 9 – 11 for Math & Science starting this July!

100% according to the IB Cirriculum

Preparation includes model papers and practice tests

Students will be well – prepared in No Time! Don't miss out!

For further information, please contact: 416.738.8824
3001 Markham Road, Unit 21

REFINANCE TO LOWER RATES
& SAVE 75%

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | 320,000 @2.9% | 1,498.02 | - |
| Car Loan | 21,000 @7.5% | 764.25 | 0.00 |
| Line Of Credit | 16,000 @6.5% | 566.67 | 0.00 |
| Line Of Credit2 | 12,500 @7% | 447.92 | 0.00 |
| Credit Card 1 | 8,800 @12% | 352.00 | 0.00 |
| Credit Card 2 | 5,200 @19% | 238.34 | 0.00 |
| Store Card | 3,000 @24% | 150.00 | 0.00 |
| | | | |
| New Mortgage Payment | 386,500 @2.5% | | 1,524.55 |
| Total Dept | | 386,500.00 | 386,500.00 |
| Total Payment | | 4,014.20 | 1,524.55 |

MONTHLY SAVING
$2,489.65

VERICO MORTGAGE BROKERS NETWORK
APPLY ONLINE kiruba.ca OR Call Me

ULTIMATE MORTGAGE & FINANCIAL SOLUTIONS
LIC#: 11995
305-5200 Finch Ave East
Scarborough, ON. M1S 4Z5

KIRUBA THANABALASINGHAM
Mortgage Agent
LIC#: M12002440

416.298.2777
info@kiruba.ca

# திரை விமர்சனம் - காக்கா முட்டை

இரு சிறுவர்கள், அவர்களின் குடும்பம், இவர்களைச் சுற்றி வாழும் மனிதர்கள் எனப் பிணையப்பட்ட எளிய கதை. ஆனால், மிக ஆழமான அரசியல் விமர்சனங்களை முன்வைக்கும் படம். தமிழ் சினிமா வரலாற்றில் வீடு, சந்தியா ராகம், அவள் அப்படித்தான் வரிசையில் இடம்பெறக்கூடியது இந்தக் காக்கா முட்டை!



- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -

சென்னை சைதாப்பாட்டை அருகே ஐந்து ஏக்கர் பரப்பளவில், 400 குடும்பங்கள் வாழும் திடீர் நகர் என்னும் குப்பம். இந்தக் குப்பத்தின் மையத்தில் உள்ள மாரியம்மன் கோயில் அருகேயுள்ள வீட்டைச் சேர்ந்த சின்னக் காக்கா முட்டை, பெரிய காக்கா முட்டை இருவரும் அண்ணன் - தம்பிகள். இந்த இரு சிறுவர்களுக்கும், தங்கள் பகுதிக்கு அருகில் புதிதாகத் திறக்கப்பட்டிருக்கும் கடையில் பீட்சா சாப்பிட ஆசை. ஆனால், 300 ரூபாய் என்னும் ஒரு பீட்சா விலை இவர்களுக்கு எட்டாக் கனியாக உள்ளது. பீட்சாவுக்காக 300 ரூபாய் சேர்க்க ரயில் பாதையில் சிந்தும் நிலக்கரியைச் சேர்த்து எடைக்குப் போட்டு காசு சேர்க்க ஆரம்பிக்கிறார்கள். பழரசம் என்னும் கலாசி தொழிலாளி இவர்களுக்கு உதவுகிறார்.

முந்நூறு ரூபாய் சேர்த்து, சேர்த்த காசை எடுத்துக்கொண்டு பீட்சா கடைக்குப் போனால், அழுக்கு சட்டையும் பரட்டைத் தலையுமாக இருக்கும் இவர்களை வாயில் காவலாளி விரட்டியடிக்கிறான். இப்பொழுது பீட்சா கடைக்குள் போக வேண்டுமானால் அதற்கேற்ற ஆடைகளும் வேண்டும் என்று, அதற்கும் காசு சேர்க்கத் தொடங்குகிறார்கள். அதனையும் சேர்த்து இரண்டு புதிய உடைகள் வாங்கி அணிந்துகொண்டு கனவுகளுடன் பீட்சா கடைக்குப் போகிறார்கள். ஆனால், இப்போதும் தடை. கூடுதலாக அடி வேறு.

இந்த இரு சிறுவர்களின் பீட்சா கனவு எப்படி நனவாகியது என்பது மீதிக்கதை.

பெரிய காக்கா முட்டை, சின்னக் காக்கா முட்டை சிறுவர்களாக விக்னேஷ், ரமேஷ் இருவரும் நடித்திருக்கிறார்கள். பிரமாதமாக நடித்திருக்கிறார்கள் என்பதைவிடச் சென்னைக் குப்பம் சிறுவர்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள் என்று சொல்வதுதான் பொருத்தம்.

நடிகர் சிம்பு, கௌரவ வேடத்தில் சிம்புவாகவே வருகிறார். இவரால்தான் குழந்தைகள் கஷ்டப்படுகிறார்கள் என்பது போன்ற எதிர்மறையான

தொடர்ச்சி 27ஆம் பக்கம்


Parkway Mall Mobilicity Special 3 DAYS ONLY
$50 OFF COUPON
$20/mo
June 19-21 Life Time Deal
UNLIMITED Talk, Text & DATA (+$10)
UNLIMITED Local Calling
UNLIMITED Ontario Long Distance
UNLIMITED Text messaging
UNLIMITED DATA, Internet, Mobile-Hotspot (+$10)
FREE Caller ID, Voice Mail, Call Waiting and more
Samsung T199 $99.99 $0
Alcatel Evolve 2 $199.99 $69.99
LG Optimus F6 $199.99 $99.99
Samsung Galaxy Core $299.99 $169.99
Samsung Galaxy S4 $649.99 $299.99
iphone 5C 16GB $549.99 $299.99
No Contract !! No Credit Check !!
PHONES $50 OFF
You can bring in your own phone
ONLY at
Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough (தமிழ்/English/Chinese)
M1R4B8, 416-999-9229
mobilicity
Now that's smart.™
Limited time offer and may only be available to new activations. Save $10/month on our $25 unlimited plan when combined with our $5 voicemail add-on while customer's account remains active with Mobilicity & requires automatic payment. $50 OFF coupon can only apply on phones and is already applied on above phones. Taxes are extra. Restrictions may apply on combining offers with other offers or promotions. All unlimited features included in each plan/add-on, including unlimited talk, text and data features, must originate and be used within the Mobilicity Unlimited Zones. Premium and special numbers are excluded. Additional terms and conditions apply. Subject to change without notice. ©2015 Mobilicity. 'Mobilicity', 'Now that's smart', Mobilicity designs and the Mobilicity logo are trademarks of Mobilicity. All rights reserved.

# JRS AUTO TECH

OPEN 24 HOURS
7 DAYS A WEEK

MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash



SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors

**TIRE SPECIALS**
NEW TIRES FROM $75
USED TIRES FROM $35

**FREE OIL CHANGE WITH RUST PROOFING**
$99 Car
$120 SUV

**BRAKE JOB**
STARTING FROM $159

**WATER PUMP TIMING BELT & LABOR**
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

**TRANSMISSION FLUSH**
*Starting From…*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

**ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS** CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection

## 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

**CALL SUBAS DIRECT → 416-206-9489**

**Tel: 416-628-4399**

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

# தந்தை



நம்பிவந்த பெண்ணை நல்லதொரு தாயாக்கி
நம்மை எல்லாம் பெறவைத்து வளர்த்தவரும்
குடும்பநலன்காக்க இரவுபகலாய் உழைத்து
குதூகல குடும்பமாய் வாழவைத்தவரும்
நம் தந்தையே

ஆலமரமாய் அதன் ஆணிவேர்போல் ஆயுள்பூராக நாம்
ஆசைப்பட்டதை எல்லாம் அடைய வைத்தவரும்
நல்லதொரு ஆசானாய் தந்தையாய் நமது
நலம் பேணும் ஒரு தாய் போலானவரும்
நம் தந்தையே

எண்ணிலும் எழுத்திலும் ஏற்றம்பெற எம்மைஎல்லாம்
ஏற்றதொரு பள்ளியில் சேர்த்து பயிலவைத்தவர்
பாரபட்சம் காட்டாது எம்மேல் பாசமிக்கவராய்
பாரில் எம்மை பலபேரும் பாராட்டும்வகை
வளர்த்தவரும் நம் தந்தையே

அனுபவமே அவரது பேரறிவு அவரது நல்அறிவால்
அவர் எமக்குத்தந்ததே முதலறிவு, தன்னை புரியாவிடினும்
தன்மானம் தவறாத, தார்மீக எண்ணம் கொண்ட
தன்னார்வ தொண்டன் போல் ஆனவர்
நம் தந்தை

உடல் நலம் அற்ற வேளை உடன் தூக்கி தோழில் போட்டு
உரியவயித்தியரை நாடிச்சென்று உடனுக்குடன் மருத்துவம்
தேடுபவரும், பருவவயது வந்ததும் எமக்குதுணை
தேடித்தந்து எம்மை பதினாறுபேறும் பெற்று
பெருவாழ்வு வாழ வைத்தவரும் தந்தையே
கலங்கரை விளக்குப் போல் இன்னும் எம்மோடு வாழ்ந்தால்
கண்கலங்கவிடா அவரை கண்இமைபோல் காப்போம்
உடலைவிட்டு உயிர் பிரிந்து போனால் தினம் தினம்
உயிர் உள்ளவரை அவர்பாதம் மலர்தூவி
விளக்கேற்றி துதிப்போம்.

- பரந்தாமன்




# தந்தையர் நாள்



தந்தையர் நாட்டை விட்டு
மைந்தரைக் கொண்டு வந்தீர்
பைந்தமிழ் பேசும் இன்பம்
செந்தமிழ் கேட்கும் சத்தம்
மந்தைகள் ஓடும் காட்சி
கந்தையுடன் பிச்சைக்காரன்
விந்தையாகப் பாடும் குயில்
எந்தை ஓட்டும் மாட்டுவண்டி
சந்தை எங்கும் காய்கறிகள்
பந்தை அடிக்கும் மாலைநேரம்
வந்தேன் என்று இடாப்பு வேளை
சொந்த வீட்டு மல்லிகைப் பந்தல்
வந்த நாட்டில் பழைய நினைவுகள்
உந்தும் போது மனக்கலக்கம்
மந்திரம் ஓதும் ஐயர்!
தந்திரம் தெரிந்த காக்கை
வெந்தமிழ் போன்ற வெயில்
சந்திரன் தோன்றும் இரவு
நொந்தவர் சொல்லும் கதைகள்
சிந்தனை செய்தால் தானே
மந்தமதி தொலைந்து போகும்.

அந்தரம் அந்தரம் என்று இங்கே
யந்திர வாழ்கை அன்றோ!
பந்தம் சொந்தம் எல்லாம்
எந்த எந்த நாட்டிலோ!
பந்தயங்கள் போட்டு வென்று
வந்தோம். இன்று பொன்நாள்!
தந்தையர் தினம் என்றே
மாந்தரெல்லாம் பூச்செண்டை
அந்த இரண்டு கைகளிலும்
முந்தையர் முதியோர் இல்லம்
வந்து காண நிற்கின்றார்
சந்தியிலே சிவப்பு மாற
வந்த வேளை நல்லதடா
அந்திப் பொழுது! தா என்று
இந்த மலர்களை ஏந்தவும்
வந்த காலன் பின்னாலே
தந்தைக்கு நீட்டினான் கயிறு
எந்தைக்கு இறுதி நாள் என்று
முந்தியே தெரிஞ்சு இருந்தால்!

- பிள்ளை -



ARISTO PEST CONTROL

Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest

24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat

Government Licensed Exterminator

(We Speak English, Gujarati & Hindi)

Same Day Service - Residential, Commercial, Industrial

We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients

Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926

info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca


# நிமோனியா (சளிசுரம்)


**கடந்த இதழ் தொடர்ச்சி....**

வருடமொன்றுக்கு இச்சளிசுரத்தால் உலக ரீதியில் 450 மில்லியன் மக்கள் வரை பாதிக்கப்படுகின்றனர். உலக சனத்தொகையில் இது 7 சதவீதமாகும். வருடமொன்றுக்கு 4 மில்லியன் மக்கள் இறக்கின்றனர். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த William Osler என்பவர் இந்த நோயினை, “The captain of the men of death” என்று விபரித்துள்ளார். இந்நோய் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மிகவும் கூடுதலாக ஏற்படுவதுடன், இறப்புக்களின் காரணங்களில் முன்னிலையையும் அடைந்துள்ளது. இந்நோய் ஏற்படுவதற்கு நூற்றுக்கு மேற்பட்ட காரணிகள் இருப்பதால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளே அதிகளவு பாதிப்புக்குள்ளாகின்றன. சிறுவர்களில் ஏற்படும் நிமோனியாவில் வைரஸ், பக்ரீறியா ஆகியவற்றின் பங்கு 45 சதவீதம் ஆகும். முதியோர்களில் இவற்றின் பங்கு 15 சதவீதமாகும். முதியோருக்கு புகைத்தல், எதிர்ப்புச் சக்தியின்மை, மதுவருந்துதல், நிரந்தரமான தொண்டைக் குழாய் அடைப்பு, கடுமையான சிறுநீரக நோய், ஈரல் நோய் போன்றவற்றால் பாதிப்பு அதிகமாகும். நிமோனியாவில் பல்வேறு வகைகள் உள்ளதால் இது வைத்தியர்களுக்கு பல சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. இதனால் உலக சுகாதார தாபனம் உலகெங்கிலும் இது பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றது.

இந்தியாவில் 43 மில்லியன், சீனாவில் 21 மில்லியன், பாகிஸ்தானில் 10 மில்லியன் என்ற வகையில் நோயாளிகளாக குழந்தைகள் உள்ளதாக அறிக்கைகள் சுட்டிக் காட்டியுள்ளன. உலக சுகாதார தாபனம் கணித்துள்ளபடி, பிறக்கும் 3 குழந்தைகளில் ஒன்று இந்நோயால் இறக்கிறது. ஐ.நா. தாபனம் நொவம்பர் 12ஆம் திகதியை உலக நிமோனியா தினமாகப் பிரகடனப்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நோயின் காரணமாக உலக பொருளாதாரத்தில் வருடா வருடம் 17 பில்லியன் டொலர் செலவாகிறதாக புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இந்நோயைக் குணப்படுத்துவதற்காக ஒவ்வொரு அபிவிருத்தியடைந்த நாடுகளும் பல பில்லியன் டொலர்களைச் செலவழிப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்நோய் தொடர்பில் உலக சுகாதார தாபனம் வெளியிட்டுள்ள கருத்துக்கள் முக்கியமானவையாகும். உலகரீதியில் குழந்தைகள் இறப்பதில் முதல் காரணம் இந்நோயாகும். 5 வயதுக்கு குறைந்த குழந்தைகளில் 15 சதவீத மரணங்களுக்கு வைரஸ், பக்ரியா ஆகியவையே முதற் காரணியாகும். சிறந்த தடுப்பூசி மூலம் நோயைத் தடுக்க முடியும். அத்துடன் தெற்காசியா, ஆபிரிக்காவின் சஹாராவைச் சுற்றியுள்ள நாடுகளில் இந்நோயின் பாதிப்பு அதிகமாகும் என புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. எனவே, நிமோனியாவைத் தடுப்பது, நோய் பீடிக்கப்பட்டவர்களைக் காப்பது, அதற்குரிய நிதியைச் சேகரிப்பது ஆகியன பற்றியெல்லாம் உலக சுகாதார தாபனம் ஆலோசனை வழங்கிவருகிறது. அத்துடன் ஆபிரிக்கா, அமெரிக்கா, தென் கிழக்காசியா, ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகள், மேற்கு பசுபிக் நாடுகள் எனப்பல பிரதேசங்களை இத்திட்டத்திற்காக அது வரையறை செய்துள்ளது.

சிறு குழந்தைகளுக்கு தடுப்பூசி ஏற்றுவதால் அக்குழந்தைகளின் மரணத்தினைத் தடுக்க முடியும். நிமோனியாவுக்கு மூலகாரணமான வைரஸ், பக்ரீறியா ஆகியவை தொற்றுவதை முன்கூட்டியே தடுப்பதற்கு இந்த ஊசி மருந்துகள் பயன்படும். சின்னமுத்து, குக்கல் எனப்படும் கக்குவான் இருமல் (whooping cough) என்பவற்றை நிறுத்த வேண்டி இருக்கும். சிறு குழந்தைகளுக்கு முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் கொடுப்பது மிகவும் முக்கியமாகும். பலர் தமது அழகு போய்விடும் என்பதற்காக தாய்ப்பால் கொடுப்பதில்லை. உண்மையில் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளை நோய்கள் அணுகுவது மிகவும் குறைவாகும்.





தற்போது உலக சுகாதார தாபனம் மட்டுமன்றி UNICEF எனப்படும் ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் அவசரகால நிதியம் (United Nations International Children's Emergency Fund) என்ற தாபனமும் கூட்டாகச் சேர்ந்து பாதுகாப்பு, தடுப்பு, சிகிச்சை என்பனவற்றை முன்னெடுத்து வருகின்றன.

நிமோனியா ஒரு தொற்று நோயாகும். வைரசுகள் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு தொற்றுவதே இதற்கான காரணம் ஆகும். மறைமுகமாக நோய்ப் பாதிப்பு ஏற்பட்டு சில காலம் கழித்து உண்மை வெளியே தெரியவரும் ஆபத்தும் உள்ளது. பக்ரீறியாவினால் ஏற்படும் நிமோனியாவை விட வைரஸ் மூலம் ஏற்படும் நிமோனியா விரைவாக ஏற்படுகின்றது. Reid என்ற மருத்துவர், “all things being equal, viral pneumonias are contagious than bacterial and fungal pneumonias” என்று கூறியுள்ளார். பொது இடங்களில் இந்நோய் பரவுவதற்கும் வாய்ப்புண்டு. அத்துடன் சிறு குழந்தைகளுக்கு பாடசாலைகள், குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் ஆகியன மூலம் இந்நோய் ஏற்படுகின்றது. வைரஸ் ஒருவரில் இருந்து இன்னொருவருக்கு விரைவாக பரவவல்லது. எனவே வயது சென்றவர்களிடம் பக்ரீறியாவினால் பரவும் நிமோனியாவும், வைரஸ் மூலம் பரவும் நிமோனியாவும் பொதுவாக சிறுவர்களிடமும் காணப்படும். அதேவேளை mycoplasma எனப்படும் நிமோனியா சிறுவர்களிடமும், வயது வந்தவர்களிடமும் காணப்படும்.

முதியோர்களுக்கு, Pneumococcal Polysaccharide Vaccine (PPV) என்ற தடுப்பூசியை ஏற்றுவது முன்னெச்சரிக்கையான நடவடிக்கையாகும். 5 வயதுக்கு குறைந்த குழந்தைகளுக்கு pneumococcal conjugate vaccine (PCV) என்ற தடுப்பூசி ஏற்றப்படுகிறது. சிறிய அளவிலும், பயமுறுத்தக் கூடிய அளவிலும் இந்நோய் ஏற்படுவதால் வைத்தியர்களுக்கு ஆரம்பத்தில் பல சிரமங்கள் ஏற்படும்.

வீடுகளில் உள்ள நோயாளிகளுக்கு உலக சுகாதார தாபனம் சில சிபார்சுகளைச் செய்துள்ளது. அதாவது, சூடான ஈரத் துணிகளை மூக்கின் மேலும், வாயின் மேலும் வைத்தல், வீடுகளில் உள்ள ஈரப்பதமூட்டி (humidifier) கருவியை இயக்குதல், ஒவ்வொரு மணித்தியாலத்திற்கு மூன்று தடவை மிக ஆழமாக மூச்சுவிடுதல், அதிகளவு நீர், குடிபானம் அருந்துதல், மதுபானம் அருந்தாதிருத்தல், புகைப்பதை நிறுத்துதல், கைகளைக் கழுவுதல் ஆகியன அவசியம் என இத்தாபனம் ஆலோசனை வழங்கியுள்ளது. நீரிழிவு நோயாளர்களைப் பொறுத்தளவில் அவர்கள் கவனமாக இருக்க வேண்டும். சிலருக்கு ஈரலைச் சுற்றி நீர் தேங்கும். இதனால் நுரையீரலில் சீழ் ஏற்பட முடியும். பல நோய்களின் கூட்டுச் சேர்க்கையால் இந்நோய் ஏற்படுவதும், மற்றையோருக்கு இலகுவாக பரவுவதும் இந்நோயின் பாரதூரமான தாக்கமாகும். இது குளிர் காலத்தில் கூடுதலாக ஏற்படும் என்பதால் மிகவும் அவதானம் தேவையாகும்.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**


**இணுவில் திருவூர் ஒன்றியம் - அறிவித்தல்**

## தமிழ்மொழித்திறமை காண் மற்றும் பண்ணிசைப்போட்டிகள் - 2015

கனடா வாழ் இணுவில் பிள்ளைகள் மத்தியில் தமிழ் மொழியறிவையும் சைவசமயப்பற்றையும் வளர்க்கு முகமாக ஆண்டுதோறும் நாம் நடத்தும் மேற்படி போட்டிகள் இடம்பெறவுள்ளன.

**காலம்:** 4.7.2015 (சனிக்கிழமை) **நேரம்:** காலை 9.00 மணி

**இடம்:** Young Nak Korean Presbyterian Church
பேசியின் முகப்பில் பதித்திருந்தாள். பள்ளிக்குப் புறப்பட்ட போது அவள் கையிலே புத்தகப் பை, பென்சில், பேனா, பேப்பர், புத்தகம் ஒன்றுமே கிடையாது. கையிலே இருந்ததெல்லாம் நனோபேசிதான். வாசலிலே இரண்டு இருக்கை கொண்ட சூரியக் கார் அவளுக்காகக் காத்திருந்தது. அவள் அணுகியதும் கதவு திறந்தது. ஏறி உட்கார்ந்ததும் பூட்டிக் கொண்டது. இரவு பனி தூவியிருந்தாலும் கார் சரியான வெப்பத்தில் இருந்தது. 'பள்ளிக்கூடம்' என்று மட்டுமே சொன்னாள். அது ஓடத் தொடங்கியது. ரோட்டில் ஆயிரக்கணக்கான கார்கள் ஒன்றையொன்று துரத்தின. இரண்டு இருக்கைக் கார்கள், நாலு இருக்கைக் கார்கள், ஆறு இருக்கைக் கார்கள். எல்லாமே சூரிய ஒளியில் இயங்குபவைதாம். வேகக் கட்டுப்பாடு கிடையாது. விபத்துகள் கிடையாது. ஆகவே இருக்கைப் பட்டி கிடையாது, காற்றுப் பை கிடையாது. சந்தி விளக்குகள்கூடக் கிடையாது. ஆனால் அவ்வப்போது கார்கள் சொல்லிவைத்தது போலத் திடீரென்று நின்று மற்ற கார்களுக்கு வழிவிட்டன. பாதிப் பயணத்திலே மனத்தை மாற்றி 'மடேரா கோப்பிக் கூடம்' என்றாள் சமந்தா. எந்தக் கோப்பிக் கூடம் என்று சொல்லவில்லை. கார் மிக அண்மையில் உள்ள ஓர் கோப்பிக் கூடத்தைத் தேர்வு செய்து அதற்குள் நுழைந்து நின்றது. மடேரா கோப்பி மூளையைக் கூர்மைப்படுத்தும் என்று ஆராய்ச்சி சொன்னது. எத்தியோப்பியன் ஆடு மேய்க்கும் சிறுவன் 500 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு செடியில் இருந்த காய்களை ஆடுகள் தின்று துள்ளிவிளையாடியதைக் கண்டான். அவற்றைப் பறித்து வேகவைத்து நீரைக் குடித்த அவனும் மகிழ்ச்சியில் துள்ளினான். அதே செய்முறையில் தயாரித்த கோப்பிதான் மடேரா கோப்பி. இது உற்சாகம் தரக்கூடியது என மருத்துவக் குழு சான்று வழங்கியிருந்தது. முதலாவது யன்னலில் 'யூனியர் கோப்பி சுப்பீரியர்' என்றாள். அடுத்த யன்னலில் காகிதக் குவளையில் கோப்பியைப் பெற்றுக் கொண்டு 'நன்றி' என்று மட்டுமே சொன்னாள். அவள் குரல் ரேகையை வைத்து அவள் கணக்கில் இருந்து பணம் அவர்கள் கணக்குக்கு மாறிவிடும். கடன் அட்டை என்பது அம்மாவின் காலத்திலேயே ஒழிந்துவிட்டது. காசுத்தாள் எப்போவோ வழக் கொழிந்து போனது. மார்ட்டி பாதுகாத்து வைத்திருக்கும் அண்ட்ரூ ஜாக்ஸன் படம் போட்ட 20 டொலர் தாள் ஒன்றை அவள் பார்த்திருக்கிறாள். நனோபேசியில் சமந்தாவின் கைரேகை, கண்ரேகை, குரல்ரேகை, டி என் ஏ இரட்டைச் சுற்று எல்லாமே பதிவாகி இருந்தன. அதை வேறு எவரும் பாவிக்க முடியாது. அவள் குரலோ கைரேகையோ கண் ரேகையோ தான் அதை இயக்க முடியும்.

பள்ளிக்கூடத்துக்குள் நுழைந்ததும் கார் குறிப்பிட்ட இடத்தில் நின்றது. கதவு திறந்து அவள் இறங்கியதும் தானாகவே மூடிக் கொண்டது. 'தரிக்கும் இடத்துக்குப் போ' எனக் கட்டளையிட்டாள். அது நகர்ந்து தரிக்கும் இடத்துக்குப் போய்த் தன்னை நிறுத்திக்கொண்டது. வகுப்பை நோக்கி நடந்தாள். எதிரே தலைமையாசிரியர் ஜோன்ஸ் நீளக் கறுப்பு மேலங்கியில் தென்பட்டார். 'வணக்கம்' என்றாள். அவரும் சொன்னார். 'அருமையான ஆரம்ப உரை' என்றாள். அவர் 'நன்றி' என்று கூறிவிட்டுச் சிவப்புத் தலைமுடி துள்ள அகன்றார். போனவருடம் பச்சைத் தலைமுடி இருந்தது. இன்னும் இரண்டு மாதத்தில் அவருக்கு 75 வயதாகிறது. ஓய்வுபெற வேண்டும். நல்ல மனிதர். தான் ஓய்வு பெறும்போது பெண்ணாக மாறப் போவதாகச் சொல்லியிருந்தார். ஏன் பெண் என்று பலபேர் கேட்டிருந்தார்கள். தனிமையையும் முதுமையையும் ஒரு பெண்ணால் தான் சாதுர்யமாகக் கடக்க முடியும். ஆணுக்கு அந்தத் திறமையும் கிடையாது. பொறுமையும் இல்லை. ஆனால் பாவம் அவரால் பால் மாற முடியாது. அவர் ஏற்கனவே மூன்று தடவை பால் மாறிவிட்டார். புதுச் சட்டத்தின் பிரகாரம் மீதி நாட்களை ஆணாகவே வாழ்ந்து தொலைக்க வேண்டியதுதான். வகுப்பை நோக்கித் தயங்கித் தயங்கி நடந்தபோது கொஞ்சம் பயமும் அதே அளவுக்கு ஆர்வமும் இருந்தது. வயிறு உள்ளுக்கு இழுத்துக்கொண்டுவிட்டது. எலி மூஞ்சி என்று செய்தி பரப்பியவன் அங்கே இருப்பான். ஓர் அருமையான முதல் நாளை இத்தனை மோசமான தாக்கிவிட்டான். வகுப்பின் கதவுக்கு அருகில் நின்றாள். வகுப்பு தொடங்குவதற்குச் சரியாக ஒரு நிமிடம் இருந்ததைக் கதவு மணி காட்டியது. அவளுடைய மோசமான ஆரம்பத்தை மேலும் மோசமாக்கும் சம்பவம் உள்ளே காத்திருந்தது அவளுக்குத் தெரியாது. கதவு அவளுடைய கண் ரேகையைப் படித்துத் திறந்து அவளை உள்ளே விட்டது. மறுபடியும் மூடிக்கொண்டது.

வகுப்பிலே எல்லா ஆசனங்களும் நிரம்பிவிட்டன. தன்னுடைய இருக்கையை நோக்கி நகர்ந்தவள் திடுக்கிட்டு நின்றாள். அமர்வதற்கு முன்னரே 'நீ யார்? எதற்காக இங்கே உட்கார்ந்திருக்கிறாய். இது மார்ட்டியின் இருக்கை?' என்றாள்.

வகுப்பு முழுக்க வாய்விட்டு ஒரே குரலில் ஆவென்று சிரித்தது. அவள் முகம் சிவந்து நீண்டு எலியின் மூஞ்சி போலவே ஆகிவிட்டிருந்தது. அந்தப் பையன் 'என்னை மார்ட்டி என்று கூப்பிடாதே. நான் இப்போது மார்ட்டின்' என்றான். 'துரோகி. இத்தனை நட்பாக இருந்தும் சொல்லவே இல்லை. உனக்குக் காட்டவென்று என் பெற்றோரைப் படம்பிடித்து வந்தேன். நான் முட்டாள். நான் முட்டாள்' என்று கத்தியபடியே தன் நனோபேசியைச் சுவரை நோக்கி வேகமாக வீசினாள். அது சுவரிலே பட்டுத் தெறித்துச் சுக்கு நூறாக உடைந்து சிதறியது. பின்னர் அந்தத் துண்டுகள் தாமாகவே ஒவ்வொன்றாக ஒட்டிக்கொண்டன. அவள் பார்த்துக்கொண்டிருக்க அது மெள்ள மெள்ள அவளை நோக்கி நகர்ந்து வந்தது.



# நீலப்படம்

அண்மையில் இந்தியாவிலிருந்து வந்த புத்தக பொதியினுள் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த நாவல் நீலப்படம். புத்தகத்தை முதலில் வாசிக்க விருப்பப்படவில்லை. காரணம் அதன் தலைப்பு. நாவலாசிரியர் லக்சுமி சரவணக்குமார் எனது முகநூல் நண்பர். அவரது முந்தைய நாவல் பலரது கவனத்தையும் பெற்றது. கானகன், உப்பு நாய்கள் போன்ற இவரது நாவல்கள் இவரை ஒரு சிறந்த நாவலாசிரியராக இனங் காட்டியுள்ளன.

பொதுவாகவே நாவலின் தலையங்கம், நாவல் என்ன விடயத்தை கூறப்போகின்றது என்பதனை ஓரளவிற்கு தெரியப்படுத்தும். நீலப்படம் நாவலும் ஒரு நடிகையின் வாழ்க்கையை மையப்படுத்தியுள்ளது.

“பாபு மெதுவாக விழித்துப் பார்க்கிறான். அது எல்லாத் துயரங்களிலிருந்தும் அவனை மீட்டெடுக்கும் இசை. யானியின் விரல் களுக்கு மட்டுமே அந்த மந்திரம் இருக்கிறது. ரிதம்ஸ் இப்பொழுது பியானோவோடு இணைந்து வசீகரமான காற்றாய் முன்னை விடவும் உயிர்ப்பான ஒரு தருணத்தை அங்கு உருவாக்க கண் திறந்து பார்க்கிறான். அந்த அறையின் ஒரு மூலையில் ஆனந்தி மிருதுவானவளாய் தூய்மையானவளாய் நின்று கொண்டிருக்கிறாள்.”

இது நாவலின் இறுதியில் வரும் ஒரு காட்சி. ஆனந்தியின் சாட்சியாகவும் அமைந்துள்ளது. இங்கிருந்து நாவல் மீண்டும் தொடங்கு கின்றது. பாபு நாவலின் முக்கிய பாத்திரம். நாவலின் ஆரம்பத்திலிருந்து பாபு என்ற பாத்திரம் படிப்படியாக வளர்கின்றது. பி கிரேட் படங்களின் நாயகன். தன்னுடன் நடித்த ஆனந்தியை அடையவேண்டும் என்ற ஆசையுடன் அலைபவன். அசாமில் இராணுவ வீரனாக இருந்தபோது தனியாகச் செல்லும் சிறுமிகள் மீது பாலியல் பலாத்காரம் செய்வது அவனது அப்போதைய பொழுது போக்கு. இதனாலேயே தனது வேலையை இழந்தவன்.

ஆனந்தி பி கிரேட் படங்களில் நாயகி. இவரது வளர்ச்சியைக் கண்டு மலையாள திரை உலகமே ஆடிப்போய் விடுகின்றது. இதன் விளைவு ஓரங்கட்டப்படுகின்றார். போராடும் குணம் கொண்ட ஆனந்தி தனது கதையையே திரைப்படமாக்கி தானே இயக்குவது எனத் தீர்மானிக்கின்றார். இதற்கு பணம் திரட்ட பலருடன் இரவுகளை கழிக்கின்றார். அப்படியிருந்தும் பணம் கொடுக்காமையால் சிறைக்கும் செல்கின்றார். இவரை சிறையிலிருந்து மீட்டு தனது வீட்டிலும் தங்க வைக்கின்றான் பாபு. ஆனந்தி தனது சிறு வயது தோற்றத்தில் நடிப்பதற்கு சத்யா என்ற சிறுமியை அணுகுகின்றார். சத்யா, பாபு, ஆனந்தி மூவரும் ஒரே வீட்டில் தங்குகின்றனர். விளைவு என்ன? பாபு அசாமில் இருந்த இராணுவ வீரனாக மாறிவிடுகின்றார்.




நாவலாசிரியர் பாபுவின் பாத்திரத்தின் மீது வாசிப்போருக்கு எந்தவித அனுதாபமும் வரக் கூடாது என்பதில் அக்கறையாக உள்ளார். பாபுவை பாபுவின் மகளே ஒதுக்கி விடுகின்றாள். ஊரும் உறவும் ஒதுக்கிய போதும் பாபுவால் மாறமுடியவில்லை. ‘கன் அன்ட் றிங்’ என்ற கனடிய தமிழ்ப் படமொன்றிலும் இவ்வாறான இராணுவ வீரனைக் காணலாம். லக்சுமி சரவணக்குமார் பாபுவின் பலவீனங்களை ஊடுருவிச் செல்கின்றார். வக்கிரமும் அராஜகமும் கொண்ட ஓர் இராணுவ வீரனாகவே பாபு நாவல் முழுவதும் வலம் வருகின்றான். ஆனந்தி அவனுடன் உடலுறுவு கொள்ள முயற்சித்த போது அவனால் இயங்க முடியவில்லை. அவனது உலகமெல்லாம் சிறுவர்கள் மீது தான் உள்ளது. இராணுவமும் பலவீனமானவர்கள் மீது தான் ஆட்சி செலுத்தும். பாபுவை ஒரு பலவீனமானவனாகவே நாவலாசிரியர் படைத்துள்ளார்.

பாபுவின் எதிராக உள்ள ஆனந்தி, நாவலின் ஆரம்பத்தில் ஒரு பாலியல் நாயகியாக தோற்றமளித்தாலும் பின்னர் ஆனந்தியின் மறுபக்கமும் ஆனந்தியின் பலமும் வெளிப்படுத்தப்படுகின்றது. சத்யா என்ற சிறுமியினுள் தன்னைத் தேடுகின்றாள். தான் சிறுவயதில் தொலைத்தவற்றையும் அனுபவித்த கொடுமைகளையும் சத்யா அனுபவிக்கக் கூடாது என நினைக்கின்றாள். லக்சுமி சரவணக்குமார் நாவலின் தலைப்புக்கேற்ப நாவலை நகர்த்தவில்லை. நீலப்படக் காட்சிகளை எதிர்பார்த்து நாவலை வாசிப்போருக்கு ஏமாற்றமே கிடைக்கும்.

பாபுவிற்கு ஆனந்தி கொடுக்கும் தண்டனை விசித்திரமானது. ஒருபுறம் யானியின் பியானோ இசை. மறுபுறம் மிகமோசமான பாலியல் காட்சிகள் தொலைக்காட்சியில் காட்டப்படுகின்றன. காப்கா கூறுவது போல் இவ்வுலக வாழ்வில் நாங்கள் செய்யும் அநியாயங்களுக்கு நாங்கள் தண்டனையை அனுபவிக்க வேண்டும். அதுபோல் ஆனந்தியும் பாபுவிற்கு தண்டனையை கொடுக்கின்றார். இறுதியில் தூரத்து நகரத்திற்கு செல்லும் புகையிரத வண்டியில் கல்லுப் போல் எதுவுமறியாமல் உள்ள பாபுவை ஏற்றி கொஞ்ச பணமும் அவன் சட்டையினுள் வைத்து விட்டு ஆனந்தி வந்து விடுகின்றார். இது ஒரு சினிமாத்தனமான முடிவு.

சமூகத்திற்கு பாதகம் விளைவிக்கும் மிக மோசமான நபர் பாபு. சிறுவர்கள் இவரை நெருங்குவதே அபாயகரமானது. அப்படிப் பட்டவருக்கு, பாபு போன்றவர்களால் பாதிக்கப்பட்ட ஆனந்தி, கொடுக்கும் தண்டனை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இத் தண்டனையை ஆனந்தி என்ற பாத்திரத்தினுக்குள் இருந்து நாவலாசிரியரே வழங்கியுள்ளார். பாபுவைப் போன்றவர்கள் பலர் மேற்கு நாடுகளில் உள்ளார்கள். இவர்கள் தண்டனைக் காலம் முடிந்த பின்னரும் சிறுவர்களை நெருங்க அனுமதி கிடையாது. சமூக கட்டமைப்பு என்பது இங்கு முறையாக உள்ளது. இதற்கு சட்டமும் துணை நிற்கின்றது. பாபுவைப் போன்றவர் களை நீண்ட காலமாக அவதானித்து அவர்கள் உளவியலை ஆய்வு செய்தபின்னர் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரமே சட்டம் தண்டனையும் கட்டுப்பாடுகளையும் விதிக்கின்றது. எழுத்தாளர்கள் சமூக கட்டமைப்பு உருவாக்கத்தில் முக்கிய பங்களிப்பவர்கள். அவர்கள் மனநோயாளி போன்று செயல்படுவது ஏற்கத்தக்கதல்ல.

நாவலாசிரியரின் இந்த முடிவு சராசரி சினி-மாத்தனமானதாகவும் தோன்றுகின்றது. நாவலாசிரியர் சினமாவில் உதவி இயக்குனர். ஒரு வகையில் பாபுவை நாவலாசிரியர் சமூகத்தின் பிடியில் இருந்து தப்ப உதவி செய்துள்ளார். இது நாவலாசிரியரின் ஆணாதிக்க மனோபாவம்.

உடல் தூய்மையை அவசியமற்றது என நிறுவும் நாவலாசிரியர் உணர்வுகளின் நேர்மையை வலியுறுத்துகின்றார். ஆனாலும் சமூக பொறுப்புணர்ச்சியிலிருந்து விலகிவிடுகின்றார்.

நடிகைகளின் வாழ்க்கையைப் பற்றி பல படங்கள் வெளிவந்துள்ளன. பல நாவல்களும் வெளிவந்துள்ளன. இவற்றினுள் பல வணிக சினிமாவின் தன்மைகளை கொண்டுள்ளன. ஒரு சில படங்களும் நாவல்களும் நடிகையின் வாழ்வியலையும் உளவியலின் தாக்கத்தையும் வெளிப்படுத்தி யுள்ளன. இந்நாவலின் பாத்திர உளவியலும் வாழ்வியலும் நாவலில் முன்னுக்கும் பின்னுக்கும் முரணாக உள்ளது. ஆனாலும் ஆனந்தியை ஓரளவிற்கு நேர்மையாக படைத்துள்ளார். பாபு என்ற இராணுவ வீரன் ஆதிக்க சக்தியின் பிரதிநிதியாக படைக்கப்பட்டுள்ளார். நாவலும் ஓர் ஆதிக்க சக்தியின் பிரதியாகவே உள்ளது.

**- ரதன் -**


கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

**வெளிக்கள விருந்தும்**

**விளையாட்டுப் போட்டியும் - 2015**

**காலம்:** ஜுலை 11ஆம் திகதி சனிக்கழமை
**நேரம்:** காலை 9:00 மணி தொடக்கம் மாலை 7:00 வரை
இடம் : ***Kid’s Town L’Amoreaux Park,***
***3159 Birchmount Road, (Birchmount & Mcnicoll)***
***Sarborough, ON***

இந்நிகழ்விற்கு பழைய மாணவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

***416.291.9956 / 416.299.6645 /416.414.3327***



**கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்**

எழுத்தாளர் ஜெயமோகன் அவர்களுடனான விசேட கலந்துரையாடல்
தமிழகத்திலிருந்து ரொறன்ரோவுக்கு வருகை தந்திருக்கும் பிரபல பேச்சாளரும் எழுத்தாளருமான ஜெயமோகன் அவர்களுடனான ஒரு கலந்துரையாடலை கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் எதிர்வரும் 16.6.2015 செவ்வாய்க் கிழமையன்று “டொன் மொன்ற்கொமெறி (DON MONTGOMERY CRC-MID SCARBOROUGH SENIORS ) ஸ்காபறோ சமூக நிலைய மண்டபத்தில் மாலை 7:00மணிக்கு நடைபெற ஒழுங்கு செய்துள்ளது. எழுத்தாளர்கள், கவிஞர்கள், பேச்சாளர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம்:** செவ்வாயக்கிழமை, ஜுன் 16, 2015

**நேரம்:** மாலை 7:00 மணி

இடம்: ***MID SCARBOROUGH SENIORS, 2467 Eglinton Avenue East***
***Scarborough, ON M1K 2R1 Closer to the Kennedy Subway.***
***EGLINTON & KENNEDY***

தொடர்புகளுக்கு: ***416.267.6712 / 416.888.8950 / 416.292.4109***

எஸ்.சிவநாயகமூர்த்தி
தலைவர்

சிவநயனி முகுந்தன்
செயலாளர்


# கப்பற் பயணம்

ஓர் ஊரில் பேராசைக்காரர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் நிறைய பணத்தை சேர்த்து வீட்டில் வைத்து இருந்தார். மூட்டை மூட்டையாக ஓர் அறையில் நிலத்திற்கு கீழ் புதைத்து வைத்து இருந்தார். ஆனால் ஒருமுறை அவர் வாழ்ந்து வந்த ஊரில் திருட்டுக்கள் அதிகமானதால் அவர் அந்த ஊரை விட்டு செல்வதாக தீர்மானித்தார். அந்த ஊர் ஒரு தீவில் இருந்ததால், அவர் ஒரு கடலால் பயணம் செய்துதான் வேறு நகரத்திற்கு செல்ல வேண்டியதாக இருந்தது. எனவே அவரும் பணமூட்டைகளை எடுத்துக்கொண்டு ஒரு பெரிய கப்பலில் பயணம் மேற்கொண்டார். கப்பலில் ஒரு நாள் முழுக்க பயணம் செய்ய வேண்டும்.

கப்பலில் மதிய உணவு வழங்கப்பட்டது. அந்தப் பணக்காரரும் சாப்பிட இருக்கும்போது அவருக்குப் பக்கத்தில் இன்னொருவர் வந்து இருந்தார். அவர்கள் இருவரும் பேசிக் கொண்டனர்.

மற்றவரும் தான் வேலை தேடிச் செல்வதாகவும், கையில் உடுப்பும், தான் படித்த படிப்பிற்கு ஆதாரமான சான்றிதழ்களும், பயணத்திற்கு மட்டும் போதிய அளவு காசும் கொண்டு வந்திருப்பதாகக் கூறினார்.

பேராசைக்காரரான பணக்காரரும் 'அப்படியா! இந்த உலகில் பணம்தான் முக்கியம். அது இல்லாமல் என்ன செய்ய முடியும்' என்றார்.



'பணம் தேவைதான். எனக்கு முட்டை நிறைய பணம் இல்லை. பணத்தைவிட திறமைதான் முக்கியம் என நான் நினைக்கிறேன்' என்றார். மற்றவர்.

'பார்ப்போம்,' என்றார் பேராசைக்காரர்.
நேரம் செல்லச்செல்ல இருள ஆரம்பித்தது. அப்பொழுது கப்பலில் பெரிய சத்தம் கேட்டது. கப்பல் ஒரு பாறையில் அடிபட்டதாகவும், எல்லோரும் தப்பிக்க சிறிய படகுகளில் இறங்க வேண்டும் எனக் கூறப்பட்டது.


பேராசைக்காரரும் சிலரின் உதவிகளுடன் தனது மூட்டைகளை சிறிய படகு ஒன்றில் ஏற்றிக் கொண்டு வந்தார். 'மூட்டைகளது பாரம் படகை உடைத்து விடலாம்', என அதிகாரிகள் கூறினாலும் அவர் அதைக் கேட்காமல் எடுத்துச் சென்றார்.

நகரத்திற்கு செல்ல இன்னும் ஒரு மணித்தியாலம் இருக்கையில் கடலின் அலைகள் பெரிதாக வரத்தொடங்கின. அங்கேயும் இங்கேயும் படகு ஆடத் தொடங்கியது.

அப்போது ஒரு பெரிய அலை பணக்காரர் வந்த படகை அடித்தது. படகும் கவிழந்து விட பண மூட்டைகள் எல்லாம் கடலில் மூழ்கி விட்டன.
தண்ணீரில் அடித்துக்கொண்டு செல்லப்பட்ட பணக்காரரை வேலை தேடிச் சென்றவர் தூக்கி தன் படகில் ஏற்றிவிட்டார். பேராசைக்காரரும் தன் இழப்பைப் பற்றி புலம்பினார்.

மற்றவரும், 'இப்போது பாருங்கள். நீங்களும் நானும் ஒரே கப்பலில் இருக்கிறோம்,' என தாங்கள் இருவரும் ஒரே நிலையில் இருப்பதை சுட்டிக் காட்டிக் கூறினார்.

**நீதி: கேடில் விழுச் செல்வம் கல்வி.**



**ஞா. ஆரணி**
**அகவை 16**

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

## TUTORIAL 301

### ANSWERS TO TUTORIAL 300

1)Since 62=7x8+6 ,the number is 8


2)Perfect numbers can also be found using the formula $2^{n-1}(2^n-1)$,where n is the natural number and $2^n-1$ is prime , when n=3 , it is 28 ,now 28= 1+2+3+4+5+6+7+14

3) Fig below

Distance squared $=(x-0)^2+(y-0)^2$

$= x^2+y^2=x^2+\frac{2}{3}(x+2)$

$=x^2+\frac{2x}{3}+\frac{4}{3}$ for the distance to be minimum differenciation of above =0 ,that is 2x+2/3 =0, -x=- 1/3,substituting in the original equation y=$\frac{\sqrt{10}}{3}$ so the point is x= - 1/3,$\frac{\sqrt{10}}{3}$




4)$\bar{U}.\bar{V}$=(5,6,-3).(1,4,5) =14 ,$|\bar{V}|^2=1^2+4^2+5^2$=42 SO Proj. Of $\bar{u}$on to$\bar{v}$ = $(\bar{u}.\bar{v})\bar{v}/\ |\bar{v}|^2 = \frac{14(1,4,5)}{42}$

= 1/3,4/3,5/3

5)Probability of getting a 'MATH' $=\frac{1}{26}.\frac{1}{25}.\frac{1}{24}.\frac{1}{23}=\frac{1}{358800}$

### TUTORIAL 301 QUESTIONS

1) $\lim_{x>8}\frac{\sqrt[3]{x}-2}{x-8}$ (b) $\lim_{x>0}\frac{2^{2x}}{2^x}\frac{-2^x}{-1}$

2)Differetiate Y=ln $x^{\sqrt{x}}$

3)Three vectors $\bar{x},\bar{y},\bar{z}$ satisfy $\bar{x}+\bar{y}+\bar{z}$ =0 .Calculate the value of $\bar{x}.\bar{y}+\bar{y}.\bar{z}+\bar{z}.\bar{x}$ if $|\bar{x}|$=2, $|\bar{y}|$=3,$|\bar{z}|$=4

4)Determine all values of x which minimise Y=6|X-3|$^2$-4|X-3| +3 .Find the minimum

5)What is the probability of rolling a sum of 7 in fewer than 3 rolls of a pair of dice?

By Mr S.F.Xavier(Teacher)

tel 6473409490/4167322228



# EDUCATION

## Review Questions15 -12

➢ **MATH GR 11**

**(i) Sam was found dead in his room. The investigations revealed that he was drugged and 1.2mg of sleeping pill substance found in his body tissues at the time of death. This particular substance has a half life of 40 minutes and it decays exponentially. There was 500 mg of sleeping pills in his room. Is there any possibility that Sam was drugged by a person who visited him 9 hours before his death?**

**(ii) It takes Amal and George the same amount time to fill a box with 200 apples. However, their friend Viveka takes two minutes than Amal and George to fill the box with the same number of apples. Amal , George and Viveka fill 2 boxes of apples in 5 minutes. How long does it take each of them to fill one box of apple.**

➢ **CACULUS 12**

**(A)**

Find $\lim_{n\to\infty} \frac{\sqrt{x^4+1}-2x^2-1}{x^2}$

**(B) Differentiate the following,**

(i) $y = \cos^2 \frac{1}{x}$

(II) $y = \cos^{-1}\left(\frac{3+5\cos x}{5+3\cos x}\right)$

(III) $y = 3 - \beta^2 \cos\beta$

(IV) $y = \beta^2 \sin\beta + 2\beta\cos\beta - 2\sin\beta$

(v) $\sqrt{1+x^2}\,.\,\sin^3\sqrt{x}$

(vi) $\frac{1}{3}\sin 3x + \sin^3 x$

**(C) Find the equation of the tangent line to the function**

$f(x) = \ln\left(\frac{x^2}{x^2+1}\right)$ at $x = 1$

➢ **CHEMISTRY 12**

**An unlabelled bottle contain solid acid. The acid is either citric acid (triprotic acid $C_6H_8O_7$) or oxalic acid (diprotic acid $C_2H_2O_4$). If 0.15 M, 30.6mL NaOH is required to titrate the 2g of acid sample, determine the acid in the bottle.**

## Answer Key : 15-11

➢ **CHEMISTRY 12**

(a) 1- propanol + con. $H_2SO_4$ (160°C) → Propene

(b) 1- propanol + $H^+$ / $Cr_2O_7^{2-}$ → Propanal
Distillation

Or use PCC/ $CH_2Cl_2$ propanal will be only product

(c) 1- propanol + $H^+$ / $Cr_2O_7^{2-}$ → Propanoic acid

(d) 1- propanol + con. $H_2SO_4$ (160°C) → Propene ;
Propene + $H^+$/ $H_2O$ → 2-proponol

(e) 1- propanol + con. $H_2SO_4$ (160°C) → Propene
Propene + HBr → 2-bromo propane

(f) 1- propanol + con. $H_2SO_4$ (160°C) → Propene
Propene + $H^+$/ $H_2O$ → 2-propanol
2-propanol $H^+$/ $Cr_2O_7^{2-}$ → Propanone

➢ **CALCULUS 12**

(i) $\lim_{x\to 0} \frac{ax^2+bx+c}{cx^2+bx+a}$ ans: c/a

(ii) $\lim_{h\to -4} \left(\frac{\frac{1}{4}+\frac{1}{h}}{4+h}\right)$ ans $\frac{1}{16}$;

(iii) $\lim_{x\to 2} \frac{x+2}{x^3+8}$ ans: 3/5

(iv) $\lim_{x\to 1} \frac{x^6-1}{x^{10}-1}$ ans: 1/12

(v) $\lim_{x\to -1} \frac{x^2+x-5}{x+1}$ ans: DNE

Ans. key 15-12 - next issue
☎ 647 341 3975
K.A.Srikrishnaraj PhD
ask@ keentutoringcentre.com
KEEN TUTORING CENTRE

# எயிட்ஸ் (*AIDS*) எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

நம்மைப் பீடித்துக் கொள்ளும் நோய்கள் பலவாக இருந்தபோதிலும் எம் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் சில நோய்களில் மிகக் கொடுமையாக குடிகொண்டு அழிக்கும் தன்மையுடையதே எயிட்ஸ் நோயாகும். இந்நோய் எப்படி எம்மை பீடித்துக் கொள்ளுகின்றது. இதனின்று எவ்விதம் தப்பித்துக்கொள்ளலாம் என்பதை அறிவதின் மூலம் எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

மருத்துவ பேரறிஞர்கள் இந்நோய் பெரும் பாலும் ஒருவரின் பழக்கவழக்க ஒழுங்கீனச் செயல்தான் எனக்கூறி உடல் உறவைக் குறிப்பிடுகின்றார்கள். எயிட்ஸ் ஐ (AIDS) Acquired Immune Deficiency Syndrome எனக் கூறலாம். அமெரிக்காவிலேயே முதல் முதலாக இந்நோய் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்த எயிட்ஸ் நோய் ஆரம்பிப்பதற்கு ஏதுவாக இருந்தது. 'HIV' என்கிற நுண்ணுயிரேயாகும் எனவும் கூறப்படுகின்றது. இந்த நுண்ணுயிரானது நமது உடம்பில் உள்ள பாதுகாப்புச் சக்தியை அடக்கி வாழக்கூடிய திறன் படைத்தது எனவும் கூறுகின்றார்கள்.

நமது இரத்தத்தில் சீவ அணுக்கள் (WBC) பல உண்டு. அதிக நோயை எதிர்பார்க்கக் கூடிய வலுவுள்ள அணு 'லிம்போசையிட்' (Lymphocyte) ஆகும். இதன் கட்டுப் பாட்டிற்கு உட்பட்ட உதவி அணுக்களும் (Helper cell ) உண்டு. இவற்றை வலு இழக்கச் செய்யும் சக்தி எயிட்ஸ் வைரசுக்குண்டு எனவும் அறியமுடிகின்றது. பின்பு தனது செயலை பூரணமாகச் செய்து முடிக்கும் இயல்புடையதாக இருக்கும்.




ஆண், பெண் இருபாலாருக்குள் ஒருவருக்கு இந்நோய் இருந்தாலும் இலகுவில் தொற்றிக் கொள்ளும். இந்நோயால் பாதிக்கப்பட்டவர் உரியகாலத்திற்கு முன்பே காலமாகி விடுவார். எனவே எயிட்ஸ் என்கின்ற நுண்ணுயிர் அணு தனது சக்தியின் திறனால் வேளைக்கே உரியவரின் உயிரை அழித்து விடும் இயல்புடைய தாகும்.

மேலும் இந்த எயிட்ஸ் ஒருவரோடு ஒருவர் உறவு வைத்தாலும் அல்லது எயிட்ஸ் ஏற்பட்டிருப்பவரின் இரத்தத்தை தவறுதலாக அல்லது கவனயீனத்தால் அல்லது பராமுக-மாய் மற்றோருக்கு செலுத்தினாலும் அல்லது இரத்தத்தை செலுத்திய கருவியை தூய்மைப்படுத்தாது மற்றோருக்கும் இரத்தத் தையோ, மருந்துகளையோ ஏற்றினாலும் அதனை மூலமும் எயிட்ஸ் கிருமி தொற்றிக்கொள்ளும் எனவும் ஆய்வுகள் எடுத்துக் கூறுகின்றன.

அத்துடன் நின்றுவிடாது எயிட்ஸ் வியாதி யுடன் கர்ப்பமாகும் மாதுவின் கருவிலும் இந்த எயிட்ஸ் நுண்ணுயிர் குடிகொண்டு இறுதியில் கருவான சிசுவும் இறக்க நேரிடும். மேலும் போதை மருந்தைப் பாவிப்போர் அதனை ஊசி மூலம் நரம்பின் ஊடாகச் செலுத்துவோர், அடிக்கடி இரத்த தானம் செய்வோர், இரத்தம் பெறுவோர், இரத்தம் உறையாத நோயை உடைய வர்கள் போன்றோருக்கு இந்நோய் ஏற்பட ஏதுவாகும்.

இந்நோய் ஒருவருக்கு ஏற்பட்டிருந்தால் பெரும்பாலும் நமது உடம்பில் உள்ள நிணநீர்கழலைகள், கழுத்தின் மேற்புறம், காதின் பின்புறம், பிடரி, அக்குள் இடுக்கு, தொடை, கெண்டைக்கால் முதலிய பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

அத்துடன் இந்நோய் ஒருவரிடம் ஏற்பட்டிருக் கின்றது என்பதை அறிய சில அறிகுறிகள் புலனாகும் எனவும் கூறப்படுகின்றது. அதாவது தொடர்ந்து விடாமல் காய்ச்சல் காணப்படும். உரியவரின் உடல் நிலை பலவீனமாக இருக்கும் எடை குறைந்து காணப்படுவதுடன் இரவு வேளையில் வியர்வை சிந்திய வண்ணம் இருக்கும். அங்கே நிணநீர்கழங்கள் வீங்கிக் காணப்படும். வயிற்றோட்டமும் ஏற்பட்டிருக்க லாம். இப்படிக் கூறியபோதிலும் 100 க்கு 30% ஆனோர் இந்நிலைப்பட்டவராகலாம் எனவும் ஆய்வாளர் கூறுகின்றார்கள். ஆனாலும் இந்நோய் ஏற்பட்ட எல்லோருக்கும் மேற்கூறிய அறிகுறிகள் தெரிவதில்லை எனவும் கூறப்படுகின்றது.

**தொடர்ச்சி 39ஆம் பக்கம்**

# பத்திரகாளி சோதிட நிலையம்

# BADRAKALLI ASTROLOGY CENTER




## Pandit Sri Hanuman

Kerala (Choddankiri)

## 416.846.2798

**100% Guaranteed Result**



The Pandith can read the Past, Present & Future by Hand prediction, name, date of birth relating to love, education, marriage, money. I will help in all problems and work with god and holy spirit. Are you suffering in silence and nobody knows your pain or sorrow, but you and god know. Well you are not alone, the holy spirit will guide you tome and convince you. I will remove and destroy all bad, witchcraft, jealously and black magic permanently with superior strength & holy given power to protect to you and your family from evil things.

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit Sri Hanuman** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்.

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமை இலவசமாக நூல் கட்டப்படும்.

- கைரேகை
- நாம நட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- பெண் பிள்ளைகள் – பெற்றார் பிரச்சனைகள்
- திருமணயோகம்
- குழந்தை பாக்கியம்
- கணவன் – மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு, நாவூறு
- சர்ப்பதோஷம்
- கர்ப்பதோஷம்
- கஷ்ட – நஷ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்றுகூடுதல்

- Business Investments
- Jealousy
- Childless Couples
- Depression
- Worries About Loved Ones
- Enemy Problems
- Money Problems
- Sexual Problems
- Love Problems
- House Protection
- Work Problems
- Money Blessing
- Family Arguments
- Drinking Problems

பிளைக் மெஜிக் அகற்றி பாதுகாப்புக் கொடுக்கப்படும்.

**5215 Finch Ave. East, Unit #257, Upstairs, Scarborough ON M1S 0C2**

**GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)**

நகைச்சுவைத் தொடர் 312

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



தாமோதரம் இன்னும் யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பி வந்தபாடில்லை. இப்போ கனேடிய தமிழ் வானொலிகளில் இலங்கை நேரம், கனடா நேரம் அடிக்கடி சொல்வதால் பலருக்கு நித்திரை குழம்பும் பிரச்சினை இல்லை. இலங்கை நேரம் இரவு 9 மணி வழமைபோல தாமோதரத்தின் ரெலிபோன் உலகருக்கு. உலகண்ணை எப்ப இஞ்சை வாறியள்? நான் எல்லா இடமும் கூட்டிக்கொண்டு போறன். நான் இஞ்சை பிஸி. என்ரை பேரிலை ஓட்டோ எடுத்து வைச்சிருக்கிறன். விரும்பிய இடமெல்லாம் திரிஞ்சுபோட்டு ஆறுதலா வாறன் எண்டு தாமோதரம் சொல்லி முடிய, ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார் உலகர்.

தாமோதரம் என்னவாம் என மூக்கை நுழைத்தனர் ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவும்.
ஸ்பீக்கரிலை விடுங்கோ உலகண்ணை என தாமோதரம் சொன்னவுடன் ஸ்பீக்கரில் விட்டார் உலகர்.

ரெலிபோன் பேசும்பொழுது ஸ்பீக்கரில் விட்டுப்பேசி சில அந்தரங்க விடயங்களும் தெரிய வந்து வம்பில் மாட்டியவர்கள் பலர்…. மறுமுனையில் இருப்பவருக்கு ஸ்பீக்கரில் கேட்பதை முதலே சொல்லவேண்டும்.

'பகலில் அக்கம் பக்கம் பார்த்துப்பேசு, இரவில் அதுவும் பேசாதே..' என என்றோ சொல்லி வைத்தார்கள்.

இன்று ஸ்பீக்கர் போனில் இரகசியம் பேசாதே என்று சொல்லியிருப்பார்கள்.
அதுசரி தாமோதரம் என தொடங்கினா செக்கண்ட் புளோர் செல்லம்மா. நாமல் ராஜபக்சா அதுதான் லெக்சனிலை தோத்த ராஜபக்சவின்ரை மகன் போய் மைத்திரிபால சிறிசேனாவோடை சேரப்போறாராம் என கேட்க, ஆட்டிலறி அன்னம்மா கேட்க வெடுக்கென விழுந்தா



ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் மகள் சந்திரிகாவும் ஒரு கட்சியிலை இருக்கேக்குள்ளை அனுரா பண்டாரநாயக்கா எதிர்க்கட்சிக்கு தாவேல்லியே? ஒரே வீட்டுக்குள்ளேயே தகப்பன் பிள்ளை வேறு வேறு கட்சிக்கு வோட்போடுறேல்லியோ எண்டபடி உலகரைப்பார்த்தா (கனடிய லெக்சனில் உலகர் ஒருவருக்கும் ரூபனும் ரூபியும் வேறொரு கட்சிக்கும் வோட் போட்டவர்கள் இரு கட்சிக்காரரும் வெல்லவில்லை) தாமோதரம் ஸ்பீக்கர் போனில் முணு முணுப்பது கேட்டது என்னை லையினை வைச்சுக்கொண்டு அவை அரசியல் அலசல் நடத்திக் கொண்டிருக்கினம். அதுசரி தாமோதரம் என உலகர் கதைக்க தொடங்கவும் லைன் கட் ஆகவும் சரியாக இருந்தது.



செக்கண்ட்புளோ செல்லம்மா விடுகிறபாடில்லை உலகண்ணை நாமல் ராஜபக்சாவின் பண மோசடி அரச வாகனங்கள் துஸ்பிரயோகம் என எக்கச்சக்கமான ஊழல் குற்றச்சாட்டு விசாரணை நடக்குது ..அவர் லெக்சன் கேட்கலாமோ என கேட்க உலகர் அமைதியாக செய்திகளை தொடர்ந்து வாசித்துக் கொண்டிருந்தார் உலகருக்கு சிரிப்பு வந்தது..

முன்னைய அரசுபோல கள்வர்களை புதிய அரசு நாடாளுமன்றத்திற்கு அனுமதிக்கக்கூடாது என சரத் பொன்சேகாவின் அறிக்கையை வாசித்து தனக்குள் சிரித்தார் உலகர்.



யாழ்பாணத்தில் மதுபான விற்பனையில் அதிக வருமானம். கூடிய கடைகளுக்கு லைசென்ஸ் வழக்கப்பட்டதும் யாழ்ப்பாணத்திலேயே என்ற புள்ளிவிபரத்தை வாசித்தா செக்கண்ட்புளோர் செல்லம்மா.

ஆட்டிலறி அன்னம்மா அடிக்கடி கதவைப்பாத்துக் கொண்டிருந்தா…



ஐபொட் அகிலாவைக் காணவில்லை. இருவரும் ஒன்றாகத்தான் கனடா கந்தசாமி கோவில் சங்குஸ்தாபனத்திற்கு சென்று வந்தனர். ஐபொட் அகிலாண்டேஸ்வரி மாறி மாறி படங்கள் எடுத்துக் கொண்டிருந்தா.

அதுமட்டுமில்லாமல் அடுத்தடுத்து வரும் கோவில் திருவிழாக்களின் திகதிகளையும் ஐபொட் அகிலாண்டேஸ்வரி குறித்துக்கொண்டா.

ஐபொட் அகிலாண்டேஸ்வரிக்கு என்ன நடந்தது?

யூன் 15-30 ஞபகம் வருகிறதா?




15. உலக காற்று தினம்.

20. மகாகவி உருத்திரமூர்த்தி நினைவு தினம் 1971 (1927-1971) சிறுநண்டு மணல்மீது படமொன்று கீறும் சிலவேளை அலை வந்து அதைக்கொண்டு போகும் - மகாகவி



20. உலக அகதிகள் நாள்.

21. தந்தையரை வாழ்த்தும் நாள். (fathers day)

21. அப்பிள் கணினி நிறுவனம் தனது முதலாவது Book இனை வெளியிட்டது.

21. கோடை காலம் ஆரம்பம்.





22. உலக இசை தினம்.

22. இசையமைப்பாளர் கே.வி.மகாதேவன் நினைவுதினம். (1918….2002)

23. யாழ். கோட்டையை போத்துக்கேயரிடமிருந்து டச்சுக்காரர் கைப்பற்றினர். (இன்று அது இருந்த இடமேயில்லை)

24. கவியரசு கண்ணதாசன் பிறந்ததினம். (1921..1981)




24. மெல்லிசை மன்னன் எம்.எஸ். விஸ்வநாதன் பிறந்ததினம்.

25. பொப் இசைப்பாடகர் மைக்கேல் ஜாக்சன் நினைவுதினம். (1958..2009)




26. 1976இல் உலகின் மிக உயர்ந்த சி.என் ரவர் (கோபுரம்) மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டது. (சி.என்.ரவர் உச்சியிலே சில்லறைக் கடையும் கலகலப்பு.. கலகலப்பு திரைப்பட பாடல் 2003)

26. சித்திரவதைக்கு ஆளானோருக்கான சர்வதேச ஆதரவு நாள்.




27. டொமினிக் ஜீவா - ஈழத்து எழுத்தாளர் மல்லிகை இதழின் ஆசிரியர் பிறந்தநாள். 1927

27. இ. முருகையன் ஈழத்துக் கவிஞர். (1935..2009) கங்கையாளே கங்கையாளே காடு தழுவி வரும் கங்கையாளே.. இலங்கை வானொலியில் ஈழத்துப்பாடல் வரிசையில் நாம் கேட்ட பாடல் வரிகள் இவருடையது.




30. நிலா குகதாசன் நினைவுதினம் (இளையநிலா குகதாசன்) இன்னொரு நாளில் உயிர்ப்பேன்.







## YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham -** செல்வ சோதி - **416.289.2033**

**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

# எயிட்ஸ்...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

எயிட்ஸ் நோய்க்கு ஆளானவர் சிலர் மற்றோருக்கு இந்நோயைப் பரப்புவராக இருந்தாலும், தான் நல்ல நிலையானவரைப் போல் நடந்து கொள்வார். எனவே இந்நோயை நீக்க மருந்துகள் கண்டு அறிய முடியாவிட்டாலும் இந்த கொடிய எயிட்ஸ் நோய் நுண்கிருமிகளை இலகுவில் அழித்து விடமுடியாவிட்டாலும் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை கையாள முடியும் எனவும் இது ஒரு சுலபமான காரியம் அல்ல எனவும் கூறப்படு கின்றது. எனவே நாம் தான் இந்நோய் ஏற்படாது இருக்க செய்கை முறையில் தடுத்தாக வேண்டும்.

ஒரு குடும்பத்தில் கணவனோ அன்றி மனைவியோ உடல் உறவில் தன்நிலை மாற்றக் கூடாது. விலை மாதுக்களுடன் உடல் உறவை தவிர்த்தல் வேண்டும். வெளிநாடு செல்லும்போது அல்லது சந்தர்ப்ப சூழ்நிலை உறவுக்கு ஏதுவாக-லாம். அவ்வேளையில் தங்கள் பாதுகாப்பிற்காக ஆணுறை பாவிக்கலாம். அது முக்கியமாகும். அதாவது ஆணில் இருந்தோ அல்லது பெண்ணில் இருந்தோ எயிட்ஸ்க்குரிய நுண்ணுயிர்கள் செல்லா திருக்கும். ஒருபால் உடல் உறவைத் தவிர்த்துக் கொள்வது மிகநன்று.

எனவே எதற்கும் தங்கள் மருத்துவரிடம் முக்கியமாக நடந்தவற்றை கூறியாக வேண்டும். அவர்கள் தங்களைப் பரீட்சித்து பார்த்து ஆய்வுகள் மூலம் கண்டு அறிந்து விபரத்தை தங்களிடம் கேட்டு அறிய உதவியாக இருக்கும். தாமதியாமல் சிகிச்சை விரைவில் பெற்றுக்கொள்ள ஏது வாகும். இந்நிலைகள் சிலருக்கு தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஏற்படுவதுண்டு.



நோயாளிகளாகிய நாமும் நமது மருத்துவமும் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கையும் விசுவாசமாகவும் இருக்க வேண்டும். அதாவது ஒருவருக்கு தடுப்பு ஊசி போடும்போது அது மற்றோருக்கு பாவிக்கப்பட்டதா? அதனை துப்பரவு செய்து மருந்துகளை, இரத்தத்தை ஏற்றுகின்றரா என்பதை ஒருவரை ஒருவர் கேட்டு அறிந்து பார்த்துக் கொள்ளவதில் கவனம் இருக்க வேண்டும். ஊசியாகவோ சிறிஞ்சாகவோ இருக்கலாம். எனவே பாதுகாப்பு முக்கியம். ஒருவருக்கு எயிட்ஸ் இருந்தால் மற்றவர்களுக்குத் தொற்றும் என்ற எண்ணம் உரியவரிடம் இருக்க வேண்டும். தகுந்த வைத்திய சிகிச்சையை செய்தாக வேண்டும். உடல் உறவு வைத்து காயம் ஏதும் ஏற்பட்டு குருதி அல்லது திரவம் வடிந்தால் அது மற்றோருக்கு தாவாதபடி பாதுகாப்பிற்காக துடைத்துவிடல் வேண்டும். சிகிச்சை முறையை கையாளலாம்.

ஒரு மாது கர்ப்பிணியாக இருக்கும்போது எயிட்ஸ் நுண்ணுயிரால் தாக்கப்பட்டவராக இருப்பின் கர்ப்பத்தில் தங்கியுள்ள கருவில் ஆபத்தான எயிட்ஸ் உருவாகலாம். அல்லது சிசு பிறந்தபின் பால் ஊட்டும் வேளையில் எயிட்ஸினால் பாதிக்கப்பட இடம் உண்டு என அறிய முடிகின்றது. அக்குழந்தை எச்.ஐ.வி (HIV) தொடர்புடன் பிறந்திருந்தா லும் வழமையாக மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் தடுப்பூசிகளை தவறாது செலுத்த வேண்டும். இதில் முக்கிய கவனம் எடுக்க வேண்டும்.

மேலும் உடல் உறவால்தான் இந்த எயிட்ஸ் ஏற்படும் என்றாலும் கீழ்வரும் நிலையிலும் எயிட்ஸ் ஏற்படலாம் எனவும் கூறப்படு கின்றது. அதாவது ஒன்று தோல் குத்துக் கருவிகள் (Skin Piercing Instruments) ஒருமுறை பாவித்ததை மீண்டும் பாவிக்க கூடாது. இரத்தத்தை நன்கு பரிசோதிக்கா மல் மற்றோருக்கு பாய்ச்சுதல் கூடாது.

மேலும் அகுபஞ்சர், காது குத்தல் பச்சைகுத்தல் ஆகிய அறிகுறியிருப்பின் அல்லது ஆண்குறி முன்தோல் நீக்கல், சுத்தமற்ற சேவிங் கட்டர் அல்ல பிளேட் என்பவற்றில் ஊடாகவும் எயிட்ஸ் நுண்ணுயிர்கள் தொற்றலாம் எனவும் அறியமுடிகின்றது. எனவே எயிட்ஸ் ஏற்பட்டு நுண்ணுயிர் தாக்கம் இரத்த வெண் அணுக்களின் வலிமையை குன்றச் செய்து விடும். இது கூடிய விரைவில் உயிரை ஆட்கொள்ளும் தன்மை படைத்தது. கூடிய விரைவில் உயிரை இழக்கும் நிலை ஏற்பட்டு விடும். எனவே எம்மைப் பாதுகாப்பது எம்மைப் பொறுத்தாகும்.

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**

D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*

# பெண் குழந்தைகளுக்கு அப்பாக்கள் சொல்லித்தர வேண்டிய விடயங்கள்

நாம் நிறைய நேரங்களில் மகளை அம்மாவின் பொறுப்பில் விட்டு விடுகின்றோம். வயது வந்த பெண் குழந்தையை அடிக்காதீர்கள்! என்று கூறுவார்கள். அம்மாவுடன் கூட்டணி அமைத்துக்கொண்டு அவர்கள் ஒதுங்கி விடுவதால் அவர்கள் வாழ்வில் என்ன நடக்கிறது என்றே அப்பாக்களுக்குத் தெரியாமல் போய்விடும். பெண் குழந்தைகளுக்கு அப்பாக்கள் சொல்லித்தர வேண்டிய விடயங்கள் நிறைய உள்ளன. ஒவ்வொன்றாக அவற்றை கவனிப்போம்.

1. நன்றாக யோசித்துப் பார்த்தால் வயது வந்த மகளுடன் தந்தையர் செலவிடும் நேரம் குறைவு. ஆங்கிலத்தில் 'குவாலிடி டைம்' என்று சொல்லுவார்கள். அதைப்போல முக்கியமான விடயங்களை கேட்டறிய வேண்டும். அவர்கள் நம்முடன் பேசும் போது நிறைய விடயங்கள் தெரிய வரும்.

2. மகளுடைய நட்பு வட்டத்தைப் பற்றி தெளிவாகத்தெரிந்து கொள்ளுங்கள். நட்பு வட்டத்தில் தினமும் என்ன நடக்கிறது என்று கேட்டுத்தெரிந்து கொள்ளுங்கள். நமது நண்பர்களையே



வாசித்ததில் பிடித்தது
- பாலச்சந்திரன்

யார் நல்லவர் யார் கெட்டவர் என்று ஆராயும்போது மகள் யாருடன் பழகுகிறாள் அவர்களுடைய நடத்தை எப்படி என்று தெரிந்துகொள்வது முக்கியம் அல்லவா?

3. கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துச்சொல்லுங்கள். ஒருகாலத்தில் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. தற்போது கல்வியில் பெண்கள் சாதனை செய்கிறார்கள். கல்வியில் அவருடைய சந்தேகங்களை கேட்டு விளக்கம் கொடுங்கள்.

4. ஆண்களைப்பற்றி சொல்லுங்கள். ஆண்களின் குணங்கள், அவர்களால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை விளக்குங்கள். நல்லவர்களை எப்படி அடையாளம் காண்பது என்று விளக்குங்கள்.

5. வாழ்க்கையைப் பற்றி அவருடன் பேசுங்கள். வாழ்க்கையில் என்னவாக விரும்புகிறார்? என்பதை கேளுங்கள். உரிய அறிவுரையுடன் நீங்கள் அவருக்கு உதவுவது எப்படி என்று திட்டமிடுங்கள்.

6. கடை, ஷொப்பிங் என்று அழைத்துச் செல்லுங்கள். பெண்கள் அந்த இடங்களில் எப்படி நடந்து கொள்கிறார் கள், ஆண்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை அவர் அறியட்டும். பொது இடங்களில் கடைப் பிடிக்கும் நாகரிகம், எப்படி உடை அணிகிறார்கள் என்பதை அவருக்கு சொல்லிக்கொடுங்கள்.

7. பெண்களென்றால் வீட்டில்தான் சாப்பிடுவார்கள் என்றில்லை. விதவித

தொடர்ச்சி 41ஆம் பக்கம்

**LAW OFFICE**


**STEFANO FORTINI**

B.A., LL.B., Barrister & Solicitor

*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*

*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் “எம்மை நாம் பாதுகாப்பது எப்படி” என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: **647.456.9796**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)


# குழந்தைக்கு சிறு வயதிலேயே கற்றுக்கொடுக்க வேண்டியவை....!



- N. பவானி -

1. பெண் குழந்தைகள் யாருடைய மடியிலும் அமரக்கூடாது என்று சொல்லிக் கொடுக்கவேண்டும்.

2. 2 அல்லது 3 வயதுக்கு மேலான குழந்தைகள் முன்னிலையில் உடை மாற்றிக் கொள்ளுவதைத்தவிர்க்க வேண்டும்.

3. குழந்தைகளுக்கு யாரும் இது உன்னுடைய கணவன் என்றோ, மனைவி-யென்றோ குறிப்பிடுவதோ, மனதில்பதிய வைப்பதோ தவறு.

4. குழந்தை விளையாடப் போகும்போது உங்கள் பார்வை அவர்கள் மீது இருந்து கொண்டே இருக்கட்டும். மேலும் அவர்கள் என்ன விளையாடுகிறார்கள் என்பதையும் கவனித்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் குழந்தைகள் தங்களுக்குள்ளாகவே பாலி யல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக நேரிடும்.

5. உங்கள் குழந்தையால் சரியாக பொருந்தியிருக்க முடியாத நபரை ஒரு போதும் சந்திக்க அனுமதிக்காதீர்கள் அல்லது அவரிடம் அழைத்துச் செல்லாதீர்கள்.

6. சுறுசுறுப்பாக இருக்கக்கூடிய ஒரு குழந்தை திடீரென்று களையிழந்து விடும்போது பொறுமையாக அவர்களிடம் பல கேள்விகளைக் கேட்டு அவர்களின் பிரச்சனை என்னவென்று கேட்டறிய வேண்டும்.

7. வளரும் பருவத்திலேயே உடலுறவு மற்றும் அதன் நன்மதிப்பீடுகளை பக்குவமாக கற்பியுங்கள். இல்லையென்றால், சமுதாயம் அவர்களுக்கு அதைப் பற்றிய தீய மதிப்பீடுகளைக் கற்றுக் கொடுத்துவிடும்.

8. குழந்தைகளுக்கு தேவையானவற்றை அவர்களுக்கு முன்பாக நாம் அறிந்து கொண்டு அவர்கள் கேட்பதற்கு முன்பாக நாமே வாங்கிக்கொடுத்துவிட வேண்டும்.

9. தொலைக்காட்சி சனல்கள் மற்றும் இணையதளங்களில் குழந்தைகள் பார்க்க அவசியமற்ற சனல்களை பேரண்டல் கன்ட்ரோல் மூலம் செயலிழக்க செய்து விட்டோமா என்பதை உறுதிப்படுத்தி கொள்வது நல்லது. மேலும், குழந்தைகள் அடிக்கடி செல்லும் நம் நண்பர்களின் வீடுகளிலும் இதை செய்து வைக்க அறிவுறுத்துவது நல்லது.

10. மூன்று வயதானவுடனேயே குழந்தைகளுக்கு தங்கள் உடலின் அந்தரங்கப் பகுதிகளை சுத்தம் செய்யக் கற்றுக் கொடுக்க வேண்டும். உடலின் அந்தப்பகுதிகளை பிறர் யாரும் தொடுவதற்கு அனுமதிக்கக் கூடாது என எச்சரிக்கை செய்து வைக்க வேண்டும். நீங்களும் அந்த வேலையை செய்யக் கூடாது. ஏனென்றால், அவசியமற்ற உதவி-களை செய்யும் போக்கு வீட்டிலிருந்துதான் தொடங்குகிறது.

11. குழந்தையை அச்சுறுத்தக் கூடிய அல்லது அவர்களின் மனநிலையை பாதிக்கக் கூடியவற்றை முற்றாகத் தவிர்க்கவும். இதில் இசை, படங்கள், நண்பர்கள் மற்றும் குடும்பங்களும் அடங்கும்.

12. மற்றவர்களுடன் ஒப்பிடும்போது உங்கள் குழந்தையின் தனித்துவத்துத்தை அல்லது தனித்திறமையைப் புரிந்து கொள்ளச் செய்யுங்கள்.

13. குழந்தை ஒருவரைப்பற்றி ஒருமுறை குற்றச்சாற்றைக் கூறினாலே, அதை கவனிக்கத் தொடங்குங்கள். கேட்டுவிட்டு அமைதியாக இருக்க வேண்டாம். நீங்கள் அதற்காக நடவடிக்கை எடுத்தீர்கள் என்பதை குழந்தைக்கு உணரச் செய்யுங்கள். மேலே சொன்னது யாவும் ஞாபகம் இருக்கட்டும். அது நாம் பெற்றோராக இருந்தாலும் சரி அல்லது பெற்றோராகப் போகிறவராக இருந்தாலும் சரி!

**நான் வாசித்தது**

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே. அனுப்புங்கள் ***Vlambaram@sympatio.ca***

யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!




# பெண் குழந்தைகளுக்கு...

39ஆம் பக்கத்தொடர்ச்சி

மாக நாம் உண்பதைப்போல மகளையும் சிறந்த உணவகங்களுக்கு அழைத்துச்செல்லுங்கள். உணவு வகைகளை ருசிக்கும் அதேநேரம் உணவக பழக்கங்கள், எப்படிப் பரிமாறுகிறார்கள் என்ற விடயமெல்லாம் தெரிந்துகொள்ளட்டும்.



8. நீங்கள் எவ்வளவுதூரம் உங்கள் மகளை நம்புகிறீர்கள், அவரைப்பற்றி எப்படி பெருமைப்படுகிறீர்கள், அவர் உங்களுக்கு எவ்வளவு முக்கியமான நபர் என்பதை அடிக்கடி உணர்த்துங்கள். இது அவர்களுக்கு தன்னம்பிக்கையையும் மன உறுதியையும் கொடுக்கும்.

9. நம் குடும்பத்தைப் பற்றி அவருக்கு எடுத்துச்சொல்லுங்கள். குடும்ப வரலாறை அவர் அறியட்டும். முன்னோர்களின் சிறப்புக்களையும் பற்றி அவர் தெரிந்து கொள்ளட்டும்.

10. உங்கள் வரலாற்றையும் கொஞ்சம் சொல்லுங்கள். நீங்கள் எப்படி, எங்கு படித்தீர்கள், உங்கள் இளமைக்காலம், உங்கள் பொழுது போக்குகள், நீங்கள் எப்படி இந்த நிலைக்கு வந்தீர்கள், உங்கள் குடும்பம் அடைய வேண்டிய இலக்கு ஆகியவற்றை அவருக்கு தெளிவாக சொல்லுங்கள்.

11. புத்தகம், கவிதை, நல்ல நாவல்கள் ஆகியவற்றை மகளுக்கு அறிமுகப் படுத்துங்கள். புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை இளம் வயதிலேயே பழக்கப்படுத்துங்கள். வீட்டில் புத்தகங்களை சேர்த்து சிறு நூலகமாக உருவாக்குங்கள். நூலகங்களிலிருந்து நல்ல நூல்களைக் கொண்டுவந்து கொடுங்கள்.

12. உடலளவிலும் மனதளவிலும் பலசாலியாக உருவாக்குங்கள். எந்த மாதிரி பிரச்சினைகள் வெளியுலகில் வரும் அதை எப்படி சமாளிப்பது என்று சொல்லிக்கொடுங்கள்.

13. இன்றைய உலகம் இயந்திரமயம். அடுத்தவர் கையை சிறு பிரச்சினைகளுக்கெல்லாம் எதிர்பார்க்க முடியாது. ஆண்கள் வரவேண்டும் என்று காத்திருக்கவும் கூடாது. வீட்டில் ஃபியூஸ் போடுவது, வண்டி ரயரை மாற்றுவது போன்ற சிறு வேலைகளைக் கற்றுக் கொடுங்கள்.

14. இவை எல்லாவற்றையும் விட நீங்கள் ஓர் உதாரணமான வாழ்க்கை வாழுங்கள். உங்களைப் பற்றி உங்கள் மகள் பெருமைப்படட்டும். உங்கள் மனைவியை மதியுங்கள். உங்கள் மனைவி எப்படி உங்களை நடத்துகிறாரோ அதைத்தான் உங்கள் மகளும் தன் கணவனிடம் செயல்படுத்துவாள். மறக்காமல் மகளின் நல்வாழ்வுக்காக பிரார்த்தியுங்கள்.








25 TH YEARS OF PUBLISHING VLAMBARAM
25
விளம்பரம்
1991-2015
Celebrating 25th Glorious Years
25 வது
ஆண்டின்
வெற்றிப் பாதையில்
விளம்பரம்
VLAMBARAM™
அகிலம் போற்றும் 'விளம்பரம்'
இணையத்திலும் இல்லத்திலும்
உள்ளத்திலும் உணர்விலும்
நிலைத்திடும்!
VLAMBARAM™
'Canada's Oldest Tamil Newspaper'
Vlambaram Publications Inc.
GTA Square
Tel: 416.282.8059 | Fax: 416.282.4978
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com
5215 Finch Avenue East, #201, Toronto ON M1S 0C2 Canada

**2014 ஆம் ஆண்டின் சிறந்த விற்பனை ஆதன முகவர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் மே 29 ஆம் திகதி 2015 NIAGARA FALLS இல் கௌரவிக்கப்பட்டார்கள்.**

**HomeLife / GTA** முகவர்களில் சிலர் இங்கே காணப்படுகின்றனர்.



"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

தொடர்புகொள்ள - **416.321.6969**

**HomeLife / GTA** யில் இணைந்து நீங்களும் வெற்றியாளராக வேண்டுமா?

**Free Real Estate Classes Start Every Week**

**HomeLife / GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave., E. #203 Toronto, ON

*Independently Owned & Operated




















***Free Real Estate Class -*** Call: ***416.321.6969***










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில்
வாசிப்பதற்கு ***www.vlambaram.com***
***www.tamilvanakkam.com***

